# விடுதலைப்புலிகள்

குரல் - 43 | புரட்டாதி - ஐப்பசி 1993 | அன்பளிப்பு: ரூபா 5/-


# தமிழீழ மக்கள் மீது சிங்களஅரசு போர்ப்பிரகடனம்

## பேச்சுவார்த்தைக் கதவுகள் நிரந்தரமாக மூடப்பட்டுவிட்டன; போரை எதிர்கொள்ள தமிழ் இளைஞர்கள் ஆயுதமேந்த வேண்டும்!

தமிழரின் 'இனப்பிரச்சினை தொடர்பான சிறீலங்கா அரசின் உண்மையான அரசியல் நிலைப்பாடும் அதற்கேயுரித்தான அணுகுமுறைகளும் இப்போது தெளிவாகியுள்ளன.

''இலங்கைத்தீவில் இனப்பிரச்சினை என்ற ஒன்றில்லை; பயங்கரவாதப் பிரச்சினைதான் உண்டு'' என்ற அரசுத் தலைவரின் பிரகடனம், உரிமை கேட்டுப் போராடும் தமிழினத்தைப் பூண்டோடு அழிப்பதற்கு விடப்பட்ட உத்தரவேயன்றி வேறொன்றும் அல்ல.

இந்த உத்தரவு இப்போது 'இராணுவ நடவடிக்கைகள்' என்ற பெயரில் நடைமுறைப்படுத்தப்பட்டுக்கொண்டிருக்கின்றது.

''கிழக்கை வருகின்ற ஜனவரிக்கு முன்னும், வடக்கை வருகின்ற யூனுக்கு முன்னும் படையினர் முழுமையாகக் கைப்பற்றிவிடவேண்டும்'' என்று விஜேதுங்கா படைத்துறையின் உயர் பீடத்திற்கு விடுத்த பணிப்பானது, இன அழிப்பிற்காக சிங்களப் படைகளுக்கு வழங்கப்பட்ட பச்சைக்கொடியாகவே கருதப்படவேண்டும்.

''பயங்கரவாதத்திற்கு எதிரான இராணுவ நடவடிக்கைகள்'' என்ற போர்வையில், வடக்கு - கிழக்கு தமிழர்கள் கொல்லப்பட்டுக்கொண்டிருக்கும் அதேவேளை, மலையகம் உட்பட சிறீலங்காவில் வாழும் தமிழர்களை அரசியல் ரீதியாக நிரந்தரமாகவே ஒதுக்கிவைக்க, விஜேதுங்கா அரசு சதியாலோசனை செய்கின்றது.

ஒட்டுமொத்தத்தில் தமிழின அழிப்பிற்குப் புதிய வியாக்கியானங்களையும், புதிய வழிமுறைகளையும் சிங்கள அரசு தயாரித்துவிட்டது.

இத்திட்டத்தின்படி பேச்சுவார்த்தைக் கதவுகளை நிரந்தரமாக மூடிவிட்டு, படைத்துறையின் கரத்தைப் பலப்படுத்தத் தேவையான நடவடிக்கைகளைச் சிங்கள அரசு எடுத்துள்ளது. இதன் அடிப்படையில் தமிழின அழிப்பிற்கு வசதியாக, விரிவுபடுத்தப்பட்ட ஒரு படைத்துறை உயர்பீடத்தையும் சிங்கள அரசு அமைத்துள்ளது.

இதுவரைகாலமும் முப்படைத் தளபதிகளையும், பொலிஸ் மா அதிபரையும் கொண்டு விளங்கிய படைத்துறையின் உயர்

→

## உள்ளே


- குடாநாட்டைப் பாதுகாத்த புலோப்பளைச்சமர்
- விடுதலைப் புலிகளின் கடற்புலிகள்.
- கடலோடு கலந்த கடற்கரும்புலிகள்.
- மூழ்கடிக்கப்பட்ட மிதக்கும் மினிமுகாம்.
- சிங்களக் கடற் படையின் பலம்.
- கடலன்னையின் புதல்வர்கள்.
- கடற் புலிகளின் வளர்ச்சியும், போரில் திருப்பு முனையும்.
- எங்கள் தாயகம் எத்தனை அழகு!


## கடற் புலிகள் சிறப்பிதழ்



தலைவர் அவர்களுடன், கடற்புலிகளின் சிறப்புத் தளபதி திரு. சூசை.


தமிழீழ விடுதலைப்புலிகளின் அதிகாரபூர்வ ஏடு

# புலிகளின் குரல்

## தமிழினத்திற்குள்ள ஒரே வழி தனி அரசுதான்!

மூன்று மாதங்களுக்கு முன் திரு. டி. பி. விஜேதுங்கா ஜனாதிபதியாகப் பதவியேற்ற உடன், புலிகள் இயக்கத்துடன் பேசி தமிழரின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப் போவதாகச் சூளுரைத்திருந்தார். அத்துடன், கலைவர் பிரபாகரனுடன் பேசுவதற்கு உதவுபவர்களை வரவேற்பதாகவும் அறிக்கைவிட்டார்.

ஆனால் இப்போது, ''இனப்பிரச்சினையென்ற ஒன்று இங்கில்லை. இங்கிருப்பது பயங்கரவாதப் பிரச்சினையே'' என்று உத்தியோகபூர்வமாக அறிக்கைவிட்டதுடன், அதைத் தொடர்ந்தும் வலியுறுத்திவருகின்றார்.

ஒப்பந்தங்கள், மாநாடுகள், தீர்வுத் திட்டங்கள், யுத்த நிறுத்தங்கள் என்று நாற்பது வருட கால வரலாற்றைக்கொண்ட தமிழரின் தேசிய இனப் பிரச்சினை, திடீரென "பயங்கரவாதப் பிரச்சினை'' யாகியது எப்படி?

மண்கிண்டிமலை முகாம் தகர்ப்புடன் புலிகள் இயக்கம் இராணுவ மேல்நிலையை அடைந்திருந்தபோது, நோபல் பரிசு பெற்ற நான்கு மேதைகளின் சமாதானத் திட்டமொன்று சிங்கள அரசுக்குச் சமர்ப்பிக்கப்பட்டது. ஐ நா. மத்தியஸ்தத்துடன் தமிழரின் இனப்பிரச்சினையைத் தீர்க்க புலிகள் இயக்கத்துடன் பேச்சு நடாத்தி, சமஷ்டி அமைப்பிலான ஒரு தீர்வுத் திட்டத்தை முன்வைக்க வேண்டுமென, அந்த மேதைகள் குழு சிறீலங்கா அரசுக்குச் சிபார்சு செய்திருந்தது.

இராணுவ மேல்நிலையில் புலிகள் இயக்கம் இருக்கும்போது அதனுடன் தீர்வு தொடர்பாக பேச்சுவார்த்தை நடாத்தினால், தமிழருக்குப் பல அரசியல் உரிமைகளை வழங்க ஒப்புக்கொள்ள வேண்டி வந்துவிடும் என்ற அச்சம் ஒருபுறமும்; மறுபுறத்தில், ஐ. நாவின் மத்தியஸ்தத்தில் நடைபெறும் இனப்பிரச்சினைக்கான தீர்வு முயற்சிகள் தமிழருக்குச் சார்பாக அமைந்துவிடுமோ என்ற பயத்தின் காரணமாகவும், ''இனப்பிரச்சினை என்ற ஒன்று இங்கில்லை'' என்று கூறுவதன் மூலம் புலிகளுடனான பேச்சுவார்த்தையையும், ஐ நாவின் தலையீட்டையும் தவிர்த்துவிடலாம் என டி. பி விஜேதுங்காவின் பேரினவாதமூளை சிந்தித்திருக்கின்றது.

இந்தச் சூழ்நிலையிலேயே நோபல்பரிசு பெற்ற மேதைகளின் சமாதான யோசனைகளுக்குப் பதிலளிக்கும்போது, ''இனப்பிரச்சினை என்ற ஒன்று இங்கில்லை; இங்கிருப்பது பயங்கரவாதப் பிரச்சினைதான். அதைச் சிறீலங்கா அரசே கையாண்டுகொள்ளும்; அதற்கு ஐ. நாவின் தலையீடு தேவையில்லை'' என்று சிறுபிள்ளைத்தனமாக திரு. விஜேதுங்கா பிரகடனப்படுத்தியிருந்தார்.

விஜேதுங்காவின் இந்த அறிவிப்பு, தமிழீழ மக்களைப் பொறுத்தளவில் அதிர்ச்சி தரும் ஒரு விடயமோ அல்லது கவலை தரும் செய்தியோ அல்ல.

ஒரு நாட்டின் ஜனாதிபதி என்ற அதி உயர் பதவியில் - பொறுப்பில் - இருந்தபடி, சர்வதேசமயப்பட்டுவிட்ட தமிழரின் தேசிய இனப் பிரச்சினையை - உலகிலேயே அதிக வளர்ச்சி கண்டுவிட்ட தேசிய விடுதலைப் போராட்டங்களில் முதன்மை நிலையில் உள்ள தமிழீழ விடுதலைப் போராட்டத்தை - ஒரு பயங்கரவாதப் பிரச்சினை என்று கூறியதன்மூலம், திரு. டி. பி. விஜேதுங்கா தனது ''தலைமைத்துவப்பண்பையும்'' ''அரசியல் விவேகத்தையும்'' முழு உலகிற்கும்நிரூபித்துள்ளார்!

ஆனாலும் விஜேதுங்காவின் இந்த அரசியல் நிலைப்பாட்டிற்கு ஒரு சுயநல நோக்கமும் உண்டு. அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டு மக்களால் தெரிவுசெய்யப்பட்ட ஜனாதிபதியாக வந்துவிட வேண்டும் என்பதில், விஜேதுங்கா தீவிர கவனம் செலுத்துகின்றார்.

சிங்களமக்களை ஒன்றுதிரட்டி அவர்களைத் தன்பக்கம் ஈர்க்க விஜேதுங்காவிடம் எந்தஒரு திறமையும் இல்லை. அலலது ஒரு சிறந்த அரசியல் - பொருளாதார திட்டமும் இல்லை. அல்லது அவ்வாறான திட்டங்களைத் தீட்டி நடைமுறைப் படுத்துவதற்கேற்ற பொருளாதார சக்தியும் விஜேதுங்கா அரசிடம் இல்லை.

இந்தநிலையில், அரசியல் சித்துவிளையாடி, சிங்களமக்களைக் கவரவேண்டிய அவசியம் திரு. விஜேதுங்காவுக்கு உண்டு.

அதற்கு ஒரேஒரு வழி, தமிழருக்கெதிரான பேரினவாத வெறியைக் கிளறி, அதற்குப் பகிரங்கமாகவே தலைமை கொடுத்துத் தன்னை ஒரு சிங்கள இனத்தின் காவலனாகக் காட்டுவதுதான்.

விஜேதுங்கா இந்தவழியையே தேர்ந்தெடுத்துவிட்டார்.

மண்கிண்டிமலை, கிளாலி, பருத்தித்துறை என்று புலிகள இயக்கம் அடுத்தடுத்துப் பெற்றுவரும் இராணுவவெற்றிகளால், சிங்களப்பேரினவாதம் கடும் சீற்றமடைந்துள்ளது. இந்தச் சீற்றத்தைச் சிங்கள தேசத்தின் பத்திரிகைகளும் மற்றும் தொடர்புச் சாதனங்களும் புத்திஜீவிகளும் மேலும் வளர்த்து, சிங்கள தேசத்தில் ஒரு பேரினவாதப் புயலைக் கிளப்பித் தமிழினத்தைப் பூண்டோடு அழிக்க முயல்கின்றார்கள்.

இப்பேரினவாத வெறிக்கு தலைமை கொடுத்து சிங்கள மக்களின் வாக்குகளைத் திரட்டிவிட, விஜேதுங்கா காய்களை நகர்த்திக்கொண்டிருக்கின்றார்.

தனது அரசின் வேலைத்திட்டங்கள் அல்லது கொள்கை விடயங்கள் அல்லது இனப்பிரச்சினைக்கான அணுகுமுறைகள் எதுவாக இருந்தாலும்சரி தனது சொந்தக் கருத்து, தீர்க்கதரிசனமான பார்வை என்றில்லாமல் அரசியல் முதிர்ச்சியற்று - பேரினவாதக் குரல்களுக்கு தலையாட்டிப் பொம்மையாக இருந்து, எண்ணிக்கையில் அதிகமானோரின் கருத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துவதன்மூலம் தன்னைப் பலப்படுத்தும் தந்திரோபாயத்தையே திரு. விஜேதுங்கா கடைப்பிடிக்கின்றார்.

மண்கிண்டிமலைமுகாம் வீழ்ச்சிக்காக அரசைக் குற்றஞ்சாட்டி அரசியல் லாபம் தேடவேண்டும் என்ற நோக்கில், ''பாதுகாப்பு அமைச்சு என்றொரு தனி அமைச்சு இல்லாததுதான் இராணுவத்தோல்விகளுக்குக் காரணம்'' என்று, சிறிமாவோ அம்மையார் அறிக்கைவிட்டார். இதை ஒரு பேருண்மை என பேரினவாதப் பத்திரிகைகளும் புத்திஜீவிகளும் சேர்ந்து 'ஆமா' போட, ஆட்களை மாற்றாது அமைப்பு மாற்றம் ஒன்றைச் செய்து, விஜேதுங்கா பேரினவாதிகளைத் திருப்திப்படுத்தியுள்ளார்.

இதேபோன்றுதான் ஐ. நாவின் மத்தியஸ்தம் வேண்டும் என்ற நோபல் பரிசுபெற்ற மேதைகளின் சமாதானத்திட்டத்திற்கு நாடளாவிய ரீதியில் சிங்களப் பேரினவாதிகள் எதிர்ப்புத் தெரிவிக்க, அந்த எதிர்ப்புணர்வுக்குத் தலைமை கொடுத்து சிங்கள மக்களைத் தன்பக்கம் ஈர்க்க விஜேதுங்கா முயன்றுள்ளார்.

அதனால்தான் உலகத்தின் பார்வையில் இது ஒரு கேலிக்கூத்தாக இருந்தாலும் அல்லது அரசியல் முதிர்ச்சியற்ற குறுகிய வாதக் கண்ணோட்டமாக இருந்தாலும், அவற்றையெல்லாம் பொருட்படுத்தாது விஜேதுங்கா அவர்கள், அடுத்த ஜனாதிபதித் தேர்தல் வெற்றியிலேயே குறியாக இருக்கின்றார்.

இனப்பிரச்சினை தொடர்பான விஜேதுங்கா அரசின் இந்த அரசியல் நிலைப்பாட்டிலிருந்து தமிழினம் இறுதிப் பாடத்தைப் படித்துக்கொள்ள வேண்டும்.

அதாவது பேச்சுக்கள் மூலமோ, சமரசப் பாதைகள்மூலமோ தமிழினத்திற்கு உரிமைகள் கிடைக்கும் என்ற கனவை, இத்துடன் நிரந்தரமாகவே கலைத்துவிட வேண்டும்.

தமிழ் மக்கள் உரிமைபெற்று சுதந்திரமாக, பாதுகாப்பாக, கௌரவமாக வாழ வழி ஒன்றுதான் உண்டு.

அது ஆயுதமேந்துவதுதான்.

வயது வேறுபாடின்றி ஆயுதப்பயிற்சி பெற்று, அழிக்கவரும் சிங்களப் படையை அடித்து விரட்டி, எமது தாயக பூமியை மீட்டுத் தனி அரசொன்றை நிறுவுவதுதான் தமிழினத்திற்குள்ள ஒரே வழி.

இல்லையேல் தமிழினம் அழிந்துவிடும் ○

---

## தமிழீழ...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பீடம் இப்போது - எஸ். ரி. எவ். என்ற விசேட அதிரடிப் படையின் கொமாண்டரையும், என். ஐ. பி. என்ற தேசிய புலனாய்வுப் பணியகத்தின் இயக்குனரையும் தன்னுள் உள்வாங்கியுள்ளது.

மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டத்தின் படையப் பொறுப்பை எஸ். ரி. எவ். இன் கையில், கொடுத்துவிட்டு அங்கிருந்து இராணுவத்தினரை எடுத்து வடதமிழீழத்தில், குறிப்பாக யாழ் குடாநாட்டின் மீதானஒரு தொடர்ச்சியான பெரும் போருக்காக அவர்களைப் பயன்படுத்திக் கொண்டிருக்கின்றனர்.

இந்த நிலையில், மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டத்தில் எஸ். ரி. எவ். வகிக்கும் பிரதான பாத்திரத்தைக் கருத்திற்கொண்டே, படைத்துறையின் உயர்பீடத்தில் அதற்கு இடங்கொடுக்கப்பட்டுள்ளது.

இதேபோன்றுதான் உளவுப்படையின் தகவல்கள் மற்றும் ஆலோசனைகளை அடிப்படையாகக் கொண்டு, போரைத் தீவிரப்படுத்தும் நோக்கிலும் சதி மற்றும் நாசவேலைகளைச் செய்யும் நோக்கிலும் என். ஐ. பியும் உள்வாங்கப்பட்டு படைத்துறையின் உயர்பீடம் விரிவாக்கப்பட்டுள்ளது. இந்த உயர்பீடத்திற்கு பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக நியமிக்கப்பட்ட ஜெனரல் கமில்டன் வணசிங்கா தலைமை வகிக்கின்றார்.

ஒன்றுபடுத்தப்பட்டு - விரிவுபடுத்தப்பட்ட இந்தப் படைத்துறை உயர்பீடமே, இப்போது தமிழின அழிப்பை முன்னின்று நடாத்திக்கொண்டிருக்கின்றது.

அதேவேளை, ஆனையிறவிலிருந்து கிளாலிவரை நடாத்தப்பட்ட படையெடுப்பைப் போன்று பல தாக்குதல் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் இக்கட்டளைப்பீடம் ஆயத்தங்களைச் செய்துவருகின்றது.

கிளாலியை விட்டுப் பின்வாங்கியதற்காக, சிங்கள தேசம் விஜேதுங்காவையும் படைத்துறை உயர்பீடத்தையும் கடிந்துகொள்கின்றது.

இது விஜேதுங்காவின் அரசியல் வாழ்வைப் பாதிக்கலாம் என்பதால், குடாநாடு மீதான அடுத்த படையெடுப்பை மிகவிரைவில் நடாத்தவே விஜேதுங்கா முயல்வார்.

ஆகவே, குடாநாட்டைச் சூழ குவிக்கப்பட்ட மேலதிகமான இருபதாயிரம் படையினரும் எந்தநேரத்திலும் - எந்தமுனையூடாகவும் ஒரு பெரும் படையெடுப்பைத் தொடங்கலாம்.

இப்படையெடுப்பை முறியடிக்க புலிகளின் சேனையில் இணையுமாறு, தமிழ் இளைஞர்களையும் இளம் பெண்களையும் புலிகள் இயக்கம் அழைத்துள்ளது.

தமிழீழ மக்கள்மீது தனது இராணுவத்தை ஏவிவிட்டு அவர்களை இனபடுகொலை செய்யமுடிவு செய்துவிட்ட அதேவேளை, மலையகம் உட்பட சிறீலங்காவில் வாழும் தமிழர்களை சிங்கள தேசத்தின் தலைமைத்துவத்தைத் தீர்மானிக்கும் ஒரு சக்தியாக இருக்கவிடாது தடுப்பதில், சிங்கள ஆளும்வர்க்கம் சதியாலோசனை செய்கின்றது.

அப்படிச் செய்வதன்மூலம் இனிவர இருக்கும் சிங்கள தேசத்தின் தலைவர்கள் தத்தமது பதவிகளுக்கு ஆபத்தேதுமின்றி தமிழ் இனத்தை அழித்தொழிப்பதில் தீவிர கவனம் செலுத்துவர் என்று, பேரினவாதிகளும் நம்புகின்றனர்.

நேரடியாக மக்களால் தெரிவு செய்யப்படும் ஜனாதிபதி ஆட்சி முறையே இப்போது சிங்கள தேசத்தில் உள்ளது. இந்த அமைப்பு முறையில் எண்ணிக்கையில் சிறுபான்மையாக விளங்கும் தமிழ் மக்களின் வாக்குப் பலம், வெற்றியைத் தீர்மானிக்கும் சக்தியாக இருந்துவருகின்றது.

இதனால்தான் தமிழீழத்தில் இனப்படுகொலைக்கு உத்தரவிட்டபொழுதிலும், திரு. பிரேமதாசா அவர்கள், மலையகத்தில் வசிக்கும் தமிழர்கள், கொழும்பில் வசிக்கும் தமிழர்கள் மற்றும் முஸ்லிம் மக்களை அரவணைப்பதுபோல பேசியும் - நடந்தும் வந்தார்.

ஆனால், விஜேதுங்கா அவர்கள் தமிழின விரோத நடவடிக்கைகளில் பகிரங்கமான முறையில் அதிதீவிரத்தைக் காட்டுவதால், மலையகம் உட்பட சிறீலங்காவில் வாழும் தமிழர்களது ஆத்திரத்திற்கும் வெறுப்பிற்கும் உள்ளாகிவருகின்றார்.

இதனால், தமிழ் மக்களது வாக்குகள் எதிர்காலத்தில் தனக்கோ அல்லது தனது கட்சியினர்க்கோ கிடைக்காது என்பதை விஜேதுங்கா உணர்ந்துகொண்டுள்ளார்.

ஆகவே, சிங்கள தேசத்து அரசியல் அமைப்பில் ஒரு பாரிய மாற்றத்தைச் செய்து, ஜனாதிபதியை தேர்வுசெய்யும் ஜனநாயக உரிமையை சிறீலங்காவில் வாழும் தமிழ் மக்களுக்கு இல்லாது செய்ய, சிங்கள ஆளும் வர்க்கம் திட்டம் ஒன்றைத் தீட்டியுள்ளது.

இதன்படி, ஜனாதிபதியை மக்கள் நேரடியாகத் தெரிவுசெய்யும் முறையை மாற்றி, நாடாளுமன்ற உறுப்பினர்களே ஜனாதிபதியைத் தெரிவுசெய்யும் வகையில் அரசியலமைப்பை மாற்ற, முயற்சிகள் நடைபெறுகின்றன.

இது சிறீலங்காவில் வாழும் தமிழ் மக்களது அரசியல் பலத்தைச் செல்லாக் காசாக்கும் முயற்சியே என்பதில், சந்தேகமில்லை.

ஒட்டுமொத்தத்தில், தமிழினத்தை சகல வழிகளிலும் நசுக்க சிங்கள ஆளும்வர்க்கம் எவ்விதம் ஒற்றுமையாகவும் அதேவேளை தீவிரமாகவும் இருக்கின்றது என்பதைத் தமிழ் மக்கள் புரிந்துகொள்ளவேண்டும்.

இந்த நிலையில் தமிழ் மக்கள் தம்மைப் பாதுகாப்பதற்காக, தமது சொந்த மண்ணில், சொந்த அரசை நிறுவுவதைத்தவிர வேறு வழியே இல்லை. ○

# குடாநாட்டைப் பாதுகாத்த புலோப்பளைச் சமர்



சிங்களப் படைவீரனை வீழ்த்தி ஆயுதம் எடுக்கும் புலிவீரன்.

**புலிகள் இயக்கம் பெற்றுவரும் போரிடும் ஆற்றலின் ஒரு படிவளர்ச்சியை, இந்தச் சமர், துல்லியமாக வெளிப்படுத்தியுள்ளது. இது, மரபுவழிச் சண்டை முறையில் இடம்பெற்றுவிட்ட ஒரு முக்கிய சாதனை.**

## 29-09-1993

நான்குமணி நேரத்தில் நடந்து முடிந்த மாபெரும் சமரைக்கொண்ட மறக்கமுடியாத நாள்.

மரபுவழிச் சண்டை முறையில், எமது போராட்ட வரலாற்றில், முக்கிய இடம் பெற்றுவிட்ட ஒரு சாதனை நாள்.

வெட்டவெளியூடாக நன்கு திட்டமிட்டு நகர்ந்த எதிரியின் கவச வாகனப்படையை, புலிகளின் மனிதக் கவசம் உடைத்தெறிந்து காவியம் படைத்த நாள்.

யாழ்.குடாநாட்டுக்கு ஏற்படவிருந்த பேரழிவைத் தற்காலிகமாகத் தடுத்த இந்த வரலாற்றுச் சமரில், 125 படையினர் கொல்லப்பட்டுள்ளனர்- 284 பேர் படுகாயமடைந்துள்ளனர் என, சிங்கள அரசே அறிவித்துள்ளது. அத்துடன் சிங்களப்படை இந்தச் சமரில் ரி-55 ரக டாங்கிகள் இரண்டையும் 'பவல்' கவச வாகனம் ஒன்றையும். முற்றாக இழந்துவிட்டது. அதேவேளை மேலும் இரண்டு கவச வாகனங்கள் சேதமடைந்துள்ளன.

வெட்டவெளியில் நடந்துமுடிந்த இந்த புலோப்பளைச் சமர் புலிகள் இயக்கம் பெற்றுவரும் போரிடும் ஆற்றலின் ஒருபடி வளர்ச்சியைத் துல்லியமாக வெளிப்படுத்தியிருப்பதுடன் இராணுவ ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் ஒரு திருப்புமுனையையும் கொடுத்துள்ளது.

இந்தச் சமரைச் சிங்களப்படைத் தரப்பில் நின்று வழிநடாத்திய- அதில் காயமடைந்த -கேணல் சரத் பொன்சேகா கூறினார்; ''விடுதலைப் புலிகள் எம்மைச் சுற்றிவளைத்து கடுமையாகத் தாக்கினர்.''

இந்தச் சாதனைச் சமரில், புலிகளின் சேனைக்கு தலைமை தாங்கி வழிநடாத்திய படைத்துறைத் துணைத் தளபதி பால்ராஜ் விபரிக்கின்றார் ...

''இந்தச் சமரில் மூன்று விடயங்கள் எதிரிக்குத் திகைப்பையும் - அச்சத்தையும் கொடுத்திருக்கும் ஒன்று, மிகக்குறைந்த நேரத்தில் சிங்களப் படை சந்தித்த பாரிய ஆள் - ஆயுத இழப்பு. இரண்டு, சிங்களச் சிப்பாய்களின் நம்பிக்கை நட்சத்திரமாக விளங்கிவரும் கவசவாகனப் படை புலிவீரர்களால் சிதறடிக்கப்பட்டதுடன், அவர்களின் கண்முன்னாலேயே - பட்டப்பகலில - டாங்கிகளையும் கவச வாகனங்களையும் இழந்தது. மூன்று, சிங்களப்படைக்குச் சாதகமான இந்த வெட்டவெளிச் சமரில் புலிகள் வெளிப்படுத்திய அபாரத் துணிச்சலும், தாக்குதல் தந்திரோபாயங்களும்.'' இவ்வாறு இந்தச் சாதனைச் சமரைத் தளபதி பால்ராஜ் மதிப்பிடுகின்றார்.

'' ஒப்பரேஷன் யாழ்தேவி ' எனப் பெயரிட்டுவிட்டு -பெரியதொரு எதிர்பார்ப்புடன் 28.09.1993 அன்று ஆனையிறவில்இருந்து. ஏறக்குறைய 5000 பேர்கொண்ட சிங்களப்படையணிகள் கிளாலி நோக்கி நகரத் தொடங்கின.

புலிகளின் தந்திரோபாய விலகல் காரணமாக - ஆனையிறவிலிருந்து நீரேரிக்கரையோரமாகப் புலோப்பளை வீதி வரை உள்ள - சுமார் 4 கிலோ மீற்றர் தூரத்தைச் சிங்களப் படைகள் சுலபமாகக் கடந்து சென்றன. அன்றிரவு புலோப்பளையில் தரித்து நின்ற படையினர், 29ஆம் திகதி காலை 8.00 மணிக்கு எறிகணைகளைச் சரமாரியாக வீசிக்கொண்டு கவச வாகனப்படையின் உதவியுடன் அல்லிப்பளை நோக்கி நகரத் தொடங்கினர். சில நூறு மீற்றர்கள் கடந்தபின், அந்த வெட்டவெளிப் பகுதியில், திடீரென நிலத்துள் இருந்து முளைத்தெழுந்த புலிவீரர்கள், ஆச்சரியமூட்டும் வகையில் தாக்குதலைத் தொடுத்தார்கள்.

இந்தத் திடீர்த் தாக்குதலைத் தொடக்கிவைத்த அணிகளுக்குத் தலைமை வகித்த, வன்னி மாவட்ட சிறப்புத் தளபதி தீபன் கூறுகின்றார்.....

''ஒரு திடீர்த் தாக்குதலைத் தொடுத்து எதிரிப் படையைச் சிதைக்கும் நோக்குடன், இரவோடிரவாக தகுந்த இடத்தைத் தேர்வு செய்ய முயன்றோம். மணற்பாங்கான நில அமைப்புடன் அங்கொன்றும் இங்கொன்றுமாக சிறுசிறு பற்றைகளையும், புற்கள் அற்ற வரப்புகளையும் தவிர துப்பாக்கிச் சண்டைக்குத் தேவையான அரண்களோ (கவர்) அல்லது உருமறைப்புச் செய்வதற்குரிய பொருட்களோ கிடைக்கவில்லை. நேரமும் விடிந்துகொண்டிருந்தது. எனவே, வரப்போரங்களிலும் பற்றைக் கரைகளிலும் கைகளாலும் தடிகளாலும், உடலை மறைக்கக்கூடிய பள்ளங்கள் தோண்டி, எதிரியின் விமானங்களுக்குப் புலப்படாமலும் நகர்ந்து வரும் படையினரின் கண்களுக்குத் தெரியாமலும் உருமறைப்புச் செய்தோம். விடிந்தபின்பும் எதிரி எமக்கருகில் வரும்வரை நாம் பொறுமையுடன் காத்திருந்தோம்.'' இவ்வாறு தளபதி தீபன் தனது அனுபவத்தைக் கூறினார்.

இந்தச் சமரில் பங்குகொண்ட ஏனைய போராளிகள் சொல்லுகின்றார்கள்......

புலோப்பளை வீதியிலிருந்து அல்லிப்பளை நோக்கி முன்னேறி வந்த படையினர், அங்கிருந்த வீடுகள் எல்லாவற்றையும் தீமூட்டி எரித்தபடி முன்னேறிக்கொண்டிருந்தனர். எறிகணை வீச்சுகளுக்கு மத்தியில் எதிர்த்தாக்குதலுக்குத் தயாராக நிலத்தில் புதைந்து கிடந்த புலிகளின் அணி ஒன்றுக்கு மிக அருகில், 15-20 மீற்றர் தூரத்தில் - சிங்களப்படைகள் வந்ததும், புலிகளின் இலகு இயந்திரத் துப்பாக்கி ஒன்று, இந்த வரலாற்றுச் சமரைத் தொடக்கிவைத்தது. இந்த நிலையில், சிங்களப்படையின் 'சலாடின்' ரக கவச வாகனம் ஒன்று, மிக அருகில் வைத்து போராளிகளின் இயந்திரத் துப்பாக்கித் தாக்குதலுக்கு உள்ளான போது, அக்கவச வாகனம் பின்வாங்கிப் பாதுகாப்புத் தேடி ஓட, பின்னாலிருந்த டாங்கி சண்டையின் முன் முனைக்கு வந்தது.


ரி-55 ரக டாங்கி தனது தாக்குதலைத் தொடங்கமுன்னர், புலிகளின் ஆர். பி. ஜி. ஒன்று டாங்கியைத் தாக்கியது. இதனால் அதிர்ச்சியடைந்த டாங்கி அணி சற்றுப் பின்வாங்கி, தன்னை நிலைப்படுத்தி, மீண்டும் தாக்குதலைத் தொடங்க முயன்றது.

ஆனால் இன்னொரு முனையிலிருந்து மீண்டும் புலிகளின் ஆர். பி. ஜி. ஒன்று டாங்கியைத் தாக்கிய அதேவேளை, தத்தமது நிலைகளிலிருந்து எழுந்த புலிவீரர்கள், கவச வாகனப் படையுடன் நின்ற எதிரிப் படையைப் பாய்ந்து சென்று தாக்கத் தொடங்கினர். ஆச்சரியமூட்டும் விதத்தில் - வேகமாக நடந்த புலிகளின் படை நகர்த்தலைக் கண்ட சிங்களப்படை அதிர்ச்சிக்குள்ளாகியது. இந்த அதிர்ச்சியிலிருந்து சிங்களப்படை மீளமுன்னர் பல முனைகளிலிருந்து எதிரிப் படைக்குள் நுழைந்த புலிவீரர்கள், கவச வாகனங்களுடன் சேர்த்து சிங்களப் படையை வேட்டையாடத் தொடங்கினர். ''சமர் முனையில் டாங்கிகள் பின்னோக்கி ஓட்டமெடுத்த காட்சிகள் கண்கொள்ளாக் காட்சிகளாக இருந்தன'' என, ஒரு புலிவீரன் மகிழ்ச்சியுடன் தெரிவித்தான்.

இந்தப் பலமுனைத் தாக்குதல்களில், வன்னி மாவட்டச் சிறப்புத் தளபதி தீபனது அணியுடன், மன்னார் மாவட்ட சிறப்புத் தளபதி ஜானினது அணி ஒரு முனையூடாகவும், மகளிர் படையணியின் சிறப்புத் தளபதி ஜெனாவின் தலைமையிலான அணி இன்னொரு முனையாலும் உள்நுழைந்து, சிங்களப் படையைச் சிதைத்து அவர்களுக்குப் பேரழிவை உண்டுபண்ணினார்கள்.


காலை 8.30 மணியளவில் தொடங்கிய இந்தச் சமர், மதியம் 12.30 மணியளவில் ஓய்வுக்கு வந்தது. அப்போது சிங்களப்படைகள் ஒரு கிலோ மீற்றர் தூரம் வரை -

(மறுபக்கம் பார்க்க)



புலோப்பளைச் சமரின் போது, கைப்பற்றப்பட்ட நிலையில் - அழிக்கப்படுவதற்கு முன் - ரி-55 ரக டாங்கிகளுள் ஒன்று

**"..... சிங்களச் சிப்பாய்களின் நம்பிக்கை நட்சத்திரமாக விளங்கிவரும் கவச வாகனப் படை, புலிவீரர்களால் சிதறடிக்கப்பட்டது. தங்களது கண்முன்னாலேயே – பட்டப்பகலில் – டாங்கிகளையும், கவசவண்டிகளையும் இழந்தது, சிங்களப்படையினரை அதிர்ச்சியிலும்–அச்சத்திலும்ஆழ்த்திவிட்டது......"**




-இராணுவ முகாம்கள். xxxx - இராணுவ வேலிகள். ---- பிரதான வீதி. ........ படகு சேவை நடைபெறும் பாதை

## குடாநாட்டை...

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

புலோப்பளை வீதிவரை - பின்னோக்கி அடித்து விரட்டப்பட்டன.

அதன் பின் மேலும் இரண்டு நாட்கள் அதே இடத்தில் தரித்து நின்று காயமடைந்த, இறந்த சிப்பாய்களை அப்புறப்படுத்தி அதற்குப் பதிலாக புதியவர்களைச் சேர்த்துப் படையை புனரமைத்துவிட்டு, கிளாலியை நோக்கி சிங்களப்படை முன்னேறியது. கிளாலியைச் சென்றடைந்ததும் புலிகளின் கண்ணிவெடியில் சிக்கி மேலும் இரண்டு வாகனங்களை சிங்களப்படை இழந்ததுடன் உயிர்ச் சேதத்தையும் சந்தித்தது. இந்த நிலையில், 04. 10. 1993 அன்று அதாவது 'யாழ்தேவி' இராணுவ நடவடிக்கை தொடங்கிய 6 ஆம் நாள், தனது இராணுவ நடவடிக்கைகளைக் கைவிட்டுப் பலத்த ஏமாற்றத்துடனும் - சோகத்துடனும் ஆனையிறவுத் தளத்திற்கே சிங்களப்படைகள் திரும்பிச் சென்றுவிட்டன.

இந்த இராணுவ நடவடிக்கையின் தோல்வியை ஏற்றுக்கொள்ள விரும்பாத சிங்களப் படைத்துறைத் தலைமை, நகைப்பிற்கிடமான விளக்கங்களையும் - வியாக்கியானங்களையும் ஒன்றுக்கொன்று முரணாகக் கொடுத்தது.

"இடத்தைக் கைப்பற்றுவதல்ல; புலிகளை இயன்றளவு கொல்லுவதே இந்த படை நகர்த்தலின் நோக்கம்" என, ஒரு இராணுவ உயர் அதிகாரி கூறியிருந்தார்.

"வெட்ட வெளியில் சண்டை பிடித்தபடியால்தான் படையினர் தரப்பில் அதிக இழப்பு ஏற்பட்டுள்ளது" என, ஒரு இராணுவ அதிகாரி சமாதானம் சொன்னார்.

ஆனால் இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சரின் அங்கமண, "வெட்டவெளிக்குப் புலிகளை இழுத்துவருவதுதான் எமது பிரதான குறிக்கோள். அப்போதுதான் புலிகளைக் கொன்று இடங்களைக் கைப்பற்றமுடியும்" என விளக்கமளித்தார்.

இதேவேளை, இப் பின்வாங்குகைக்குப் படைத்துறைத் தலைமை விளக்கமளித்து அறிக்கை விடுத்துள்ளது.

கிளாலிப் போக்குவரத்துப் பாதையை மூடுவதுதான் இராணுவ நடவடிக்கையின் நோக்கம். அதைப் படையினர் சாதித்துவிட்டனர். கிளாலி இறங்குதுறையை அழித்து, புலிகளின் முகாம்களைத் தகர்த்து கடற்பயணத்தைத் தடுத்துவிட்டதாக அந்த அறிக்கை கூறுகின்றது.

கொழும்புத் துறைமுகத்தைப் போன்றுதான் கிளாலி இறங்குதுறையும் இருக்கும் என்று நம்பும் சிங்கள மக்களை, படைத்துறைத் தலைமையின் அறிக்கை திருப்திப் படுத்தியிருக்கும்.

ஆனாலும் படைத்துறைத் தலைமை இந்த அறிக்கையை எழுதத் தொடங்கமுன்னரே, புலிகளின் விசைப்படகுகள் கிளாலிக் கடல் நீரேரியில் நீரைக்கிழித்தபடி பயணம் போய்க்கொண்டிருந்த காட்சிகளை, நாகதேவன்துறையிலிருந்த கடற்படைத்தள ராடர்கள் அழகாகக் காட்டிக்கொண்டிருந்திருக்கும். ஆனால் அது சிங்கள தேசத்துக்குத் தெரிந்திருக்க வாய்ப்பில்லைத் தானே! அப்படித் தெரிந்திருந்தாலும் அது கிளாலிக் கடலில் செல்லும் படகல்ல; தொண்டமானாறு கடலேரியில் செல்லும் படகெனப் பதிலறிக்கைவிடச் சிங்களப் படைத்துறைத் தலைமைக்கு அதிக நேரமெடுக்காது.

ஆனாலும் இந்த 'யாழ்தேவி' இராணுவ நடவடிக்கையின் நோக்கம் விசாலமானது இது ஒரு பெருந் திட்டம். பல கட்டங்களாகப் பல்லாயிரம் படைவீரர்கள் பங்குகொண்டு, பாரிய நிலப்பகுதியைக் கைப்பற்றும் ஒரு நாசகாரத் திட்டம். இத்திட்டத்தை நடைமுறைப்படுத்த ஆனையிறவு, பூநகரி, காரைநகர், பலாலி ஆகிய தளங்களில் சுமார் இருபதாயிரம் படையினர் காத்துக் கொண்டிருந்தனர்.

கிளாலிமட்டும் ஓடிவந்து திரும்பிச் செல்ல 'யாழ்தேவி' வரவில்லை. அது சாவகச்சேரி, யாழ்நகர் ஊடாக தெல்லிப்பளைவரை செல்வதுதான் திட்டம்.

இதேபோன்றுதான் கடந்த ஆண்டும் லெப். ஜெனரல் கொப்பேகடுவ அராலி வழியாக மானிப்பாயை அடைந்து, அங்கிருந்துயாழ். நகரைக் கைப்பற்றும் திட்டமொன்றை அமுல்படுத்த முயன்றார். அந்த இராணுவ நடவடிக்கை தொடங்க ஒருநாள் இருக்க, அராலித் துறையில் நடந்த கண்ணிவெடியில் அவரும் அவரது குழுவினரும் கொல்லப்பட, அப்படையெடுப்புத் திட்டம் தற்காலிகமாகக் கைவிடப்பட்டது. அப்படையெடுப்புத் திட்டத்திற்கு, 'ஒப்பரேஷன் ஃபைனல் கவுண்ட் டவுண்' எனப் பெயரிட்டிருந்தனர்.

இப்போது கொப்பேகடுவவின் திட்டம் மேலும் விரிவாக்கப்பட்டு கிளாலி, சாவகச்சேரிப் பகுதிகளையும் உள்ளடக்கி பாரிய திட்டமாக வரையப்பட்டிருந்தது என்பதுதான் உண்மை.

லெப். ஜெனரல் கொப்பேகடுவ குழுவினரின் மரணத்துடன் தற்காலிகமாகக் கைவிடப்பட்டிருந்த படையெடுப்புத் திட்டத்தை, இப்போது புலோப்பளைச் சமரில் படையினர் சந்தித்த பேரிழப்புக் காரணமாக, மேலும் ஒருமுறை அரசு பிற்போட்டுள்ளது.

ஆனாலும், முன்னரைப்போல நீண்டகாலம் தாமதித்திருக்காது இம்முறை விரைவில் அடுத்த படையெடுப்பை வேறொரு முனையிலிருந்து தொடுக்க ஆயத்தங்களைச் செய்கின்றது.

இவ்விதமானதொரு பெரும் படையெடுப்பை விரைவில் செய்யவேண்டிய தேவை சிறிலங்காவின் ஜனாதிபதி விஜேதுங்காவுக்கு உண்டு; படைத்துறைத் தலைமைக்கும் அது அவசியம்.

இராணுவ வழிமுறைகள்மூலம்தான் இனப்பிரச்சினையை அணுக வேண்டும் என்ற கடும்போக்கை கூறி சிங்கள மக்களின் ஆதரவைப் பெற்ற விஜேதுங்கா இந்த இராணுவ நடவடிக்கையின் தோல்வியை ஏற்றுச் சும்மா இருப்பார் என்று கூறமுடியாது. அடுத்த வருடம் ஜனாதிபதித் தேர்தலும் வருகின்றது. அத்துடன், 'யாழ்தேவி' இராணுவ நடவடிக்கையில் பங்குகொள்ள வந்த சுமார் இருபதாயிரம் துருப்புக்கள், குடாநாட்டைச் சூழ உள்ள முகாம்களில் முடங்கிக் கிடக்கின்றனர்.

எனவே மிகவிரைவில் மீண்டுமொரு படையெடுப்பை குடாநாடு மீது நடாத்த வேண்டும் என்பதில், படைகளும் அரசும் உறுதியாகவே இருக்கின்றன. இந்த நிலைப்பாட்டிற்கு சிங்கள தேசமும் தனது முழு ஆதரவையும் தெரிவித்துக்கொண்டிருக்கின்றது.

## அன்றும் இன்றும்

தாத்தா விறைத்தபடி நிற்கிறார்.

ஏன்?

"எஞ்சினியராய் வருவியோ? டொக்ரராய் வருவியோ?"

எனக் குழந்தைகள் கேட்கப்பட்ட அந்தக் காலத்திற்கு தாத்தா நலகு பழக்கப்பட்டவர்

ஆனால், சற்று முன்பு நடந்தது?

பேரிரைச்சலோடு வந்த விமானங்களின அதிர்வுகள். அழிவுகள் ஊரெங்கும் பாய்ந்தன.

உறுமல் ஓய்ந்ததும் வீட்டார் வெளியில் வருகின்றனர் தாத்தாவின் கண்களில கலக்கம்; கைகளில் நடுக்கம்.

ஆனால் கூடநின்ற மூன்றரை வயதுப் பேரன நடுங்கவில்லை, கலங்கவில்லை

"நீ எப்படிக்கான் ராசன் வாழப் போறாயோ?" இது எதையெதையோ எண்ணிய தாத்தாவின் தழுதழுத்த குரல்


அந்தப் பிஞ்சின் குரல் பதில் சொல்லுகிறது, மிகஉறுதியோடு-

"நான் புலியாகப் போறன்."


தாத்தாவின் எண்ணம் பேரனைப்பற்றி; பேரனின் நினைவுகள் தன் எதிரியைப்பற்றி.

இது இன்றைய நிலை.

(உண்மை நிகழ்விலிருந்து)



கரும்புலி மேஜர் புவீந்திரன்



கரும்புலி மேஜர் வரதன்

(விபரம் 8 ஆம் பக்கம் பார்க்க)

# கடற்புலிகள்

## தமிழீழக் கடல்

தமிழீழத்தைப் பொறுத்தளவில், இது மிக மிகப் பிரதானமானது.

எங்கள் தாய்த்திருநாட்டில் நிலத்திற்கு நிகராகக் கடலும் இணைந்திருக்கிறது.

தமிழீழ நிலப்பகுதியை எங்கள் கடல் மூன்று பக்கங்களில் அரவணைத்தபடி உள்ளது.

பலர் நினைப்பதைப்போல எமது பாரம்பரிய வாழிடமான நிலப்பகுதி, மட்டும்தான், தமிழீழத் தாயகம் அல்ல.

பெருமையும், பழமையும், செழுமையும் கொண்ட இந்தக் கடலும் நிலமும் இணைந்தது தான், எமது தமிழீழத் தாயகம் ஆகும்.

## இது எங்கள் கடல்

ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக எமது முன்னோர்களின் சமூக, பொருளாதார வாழ்வோடு இது பின்னிப் பிணைந்து நிற்கின்றது.

எமது முன்னோர்களின் கட்டுமரங்களும், வாணிபக் கப்பல்களும், போர்ப் படகுகளும் இக்கடலன்னையின் மடியில் தான் தவழ்ந்து திரிந்தன.

தமிழீழக் கடல், பொருளாதார ரீதியாகவும், அரசியல் ரீதியாகவும், வெளி உலக வர்த்தகத் தொடர்புகளுக்காகவும் முக்கியம் பெறுகின்றது.

ஆனால் அதைவிட முக்கியமாக, தமிழீழத்தின் பாதுகாப்புக்கு இக்கடல் மிகமிகப் பிரதானமானது.

இக்கடல் எமது கட்டுப்பாட்டில் உள்ளவரை மட்டும்தான் அதனால் வரும் பொருளாதார நன்மைகளையும், அரசியல் நன்மைகளையும் எமது மக்கள் அனுபவிக்கமுடியும்.

ஆகவே எமது கடல், எமது தேசத்தின் பாதுகாப்போடு பின்னிப் பிணைந்து கிடக்கின்றது.

ஆசியாவிலேயே மிகச் சிறந்த இயற்கைத் துறைமுகமான திருக்கோணமலையைக் கொண்டிருப்பது, எமது கடலின் சிறப்பியல்புகளில் ஒன்றாகும். இது தவிர, கேந்திர முக்கியத்துவம்வாய்ந்த பல துறைமுகங்களையும், பொருளாதார மையங்களையும் எமது கடல் கொண்டிருக்கின்றது.

தமிழீழத் தாயக மீட்பிற்கான ஆயுதப் போராட்டம் கருக்கொண்டு ஆரம்பமாகிய முன்னைய காலத்திலும்சரி, அது முனைப்புற்று வளர்த்துச்செல்லப்படும் நிகழ்காலத்திலும்சரி, விடுதலைக்குப் பின் நிறுவப் படப்போகின்ற தனி அரசு ஆட்சியில் நாட்டின் பாதுகாப்பு, பொருளாதாரம், அரசியல் ஆகிய விடயங்களைத் தீர்மானிக்கும் எதிர்காலத்திலும் சரி, எமது கடல் மிகப் பிரதான பங்கு வகித்தது – வகிக்கப் போகின்றது.

இப்படியாகப் பல பரிமாணங்களில் முக்கியத்துவம் பெற்ற பல சிறப்பியல்புகளைத் தன்னகத்தே கொண்டுள்ள – எங்கள் கடலை, நாம் சிறீலங்காவின் ஆதிக்கத்திலிருந்து விடுவிக்க வேண்டுமெனில், தமிழீழக் கடற்பரப்பில் நாம் எதிரியை விடப் பலம் பொருந்தியவர்களாக மிளிர வேண்டும். இந்த யதார்த்த உண்மையை அன்றே புரிந்துகொண்ட எமது தலைவர் வே. பிரபாகரன் அவர்கள், பல வருடங்களுக்கு முன்னரேயே அதற்கு வேண்டிய திட்டங்களைத் தயாரித்து, படிப்படியாக அதற்கு நடைமுறை உருவமும் கொடுத்துள்ளார்.



சண்டைக்குத் தயாராகும் கடற்புலிகளின் படகொன்றில், தாக்குதல் வழிமுறையை விளங்கப்படுத்துகிறார் தளபதி சூசை.

*தமிழீழக் கடலன்னை, தியாகத்தாலும் சோகத்தாலும் உருவான ஒரு மகத்தான காவ்யத்தை தன்னுள் கொண்டிருக்கின்றாள்.*

சிங்களப் பேரினவாத அரசிடம் இருந்து எமது தாயகத்தை மீட்டெடுப்பதற்கான போராட்டம் என்னும்போது, தமிழீழத் தாயகத்தின் தரை எல்லைகளையும் கடல் எல்லைகளையும் விடுவிப்பது என்பதையே, அது குறித்து நிற்கின்றது.

எனவே, தமிழீழத் தாயகத்தின் ஒரு பகுதியாகிய தரையில் பிரமாண்டமான வளர்ச்சியுடன் இருக்கும் எமது தரைப்படையைப் போன்று, தமிழீழம் தனக்கென்று ஒரு கடற்படையையும் கட்டி எழுப்ப வேண்டியது அவசியம்.

எமது மக்களின் சுதந்திர எழுச்சியை உற்று நோக்குவோமானால், அது புரட்சிகர ஆயுதப் போராட்டமாகப் பரிணமித்தபின், எந்த அளவுக்குக் கடலோடு பின்னிப் பிணைந்து இருக்கின்றது, என்பதைத் தெரிந்துகொள்ளலாம்.

தமிழீழம், தரைத் தொடரில் தனது எல்லையாக சிறீலங்காவை மட்டுமே கொண்டிருக்கின்றது. ஏனைய திசைகளில் கடலிலேயே எமது எல்லைகள் இருக்கின்றன. எமது ஆயுதப் போராட்டம் கடந்து வந்த ஒவ்வொரு வளர்ச்சிக் கட்டத்திலும், தமிழீழக் கடல் மிகப் பெரிய பாத்திரத்தை வகித்துள்ளது.

இச்சூழ்நிலையிலேயே 1984 ஆம் ஆண்டு, தலைவர் பிரபாகரன் அவர்கள், விடுதலைப் புலிகள் இயக்கத்தின் கடற்புலிகள் படைப் பிரிவுக்கு அதன் வரலாற்றுரீதியான பிறப்பைக் கொடுத்து, ஆரம்பத்தில் அதற்கு 'கடற்புலிகள்' எனப் பெயரும் சூட்டினார்.

ஆரம்பத்தில் கடற்புலி அணியினருக்கு கடல் சம்பந்தமான அறிவு ஊட்டப்பட்டதுடன், கடற் சண்டைகளுக்குத் தேவையான பயிற்சிகளும் அளிக்கப்பட்டன.

ஆனாலும் கடற்புலி அணியினர் எதிரியிடம் வலிந்து சென்று கடற் சண்டைகளில் ஈடுபடுவதைத் தவிர்த்தார்கள்.

விடுதலைப் போராட்டத்தில் அந்தந்தக் காலங்களோடு ஒட்டிய தேவைகளை நிறைவு செய்யும் பல பணிகளை, அவர்கள் ஆற்றவேண்டியிருந்தது. கடற் பயணங்கள் போவதற்கும் அவற்றிற்குப் பாதுகாப்பு அளிப்பதற்குமான வேலைகளையே ஆரம்பத்தில் கடற்புலி அணியினர் செய்து வந்தனர்.

எனினும் சிறீலங்கா கடற்படையினரின் போர்ப் படகுகள் மீது, ஆங்காங்கே ஒருசில கடற்கண்ணித் தாக்குதல்களையும் நிகழ்த்தியுள்ளனர்.

1984 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டதிலிருந்து 6 வருடங்களாகப் பெரிய அளவிலான கடற் சண்டைகள் எதிலுமே ஈடுபடாதிருந்த கடற்புலி அணியினர், 1990 ஆம் ஆண்டு திரும்பவும் சிறீலங்கா இராணுவத்துடன் போர் ஆரம்பமாகிய போது, கடற் சண்டைகளில் ஈடுபடத் தொடங்கினர்.

( மறுபக்கம் பார்க்க )

# கடற்புலிகள்

இக் கடற்போரிலும் கரும்புலித் தாக்குதல் வடிவம் புகுத்தப்பட்டு, கடற்போர் ஒரு புதிய பரிமாணத்திற்குள் சென்றது.

இந்த வகையில் சிறீலங்காக் கடற்படை மீதான தனது முதலாவது பாரிய தாக்குதலை, 10.07.1990 அன்று வல்வைக் கடலில் வைத்துக் கடற் கரும்புலிகள் மேற்கொண்டனர்.

வெடி மருந்து நிரப்பிய படகொன்றுடன் சென்ற கடற் கரும்புலிகளான மேஜர் காந்தரூபன், கப்டன் கொலின்ஸ். கப்டன் வினோத் ஆகியோர் சிறீலங்கா கடற்படையின் ஒரு போர்க் கப்பலைச் சேதமாக்கி, இந்த வீரசாதனையைப் படைத்தார்கள்.

இதே போன்று 04.05.1991 அன்றும் வல்வைக் கடலில் வைத்துக் கட்டளைக் கப்பலொன்று கடற்புலிகளால் தகர்க்கப்பட்டது. இதுவும் ஒரு கரும்புலி நடவடிக்கை என்பது குறிப்பிடத்தக்கது. இதில் கப்டன் சிதம்பரம், கப்டன் ஜெயந்தன் ஆகியோர் வீரச்சாவை அணைத்துக்கொண்டார்கள்.

தமிழீழக் கடற்பரப்பில் சுதந்திரமாக உலாவந்த சிங்களக் கடற்படையினருக்கு இவ்விரண்டு கரும்புலி நடவடிக்கைகளும் பீதியைக் கொடுத்திருந்தன. அத்துடன் தமிழீழக் கடற்பரப்பில் சிங்களக் கடற்படை வைத்திருந்த கடல் ஏகபோகம் உடைந்து சிதறியது.

தமிழ் மக்களாகிய நாம் ஒரு யதார்த்தத்தை விளங்கிக் கொள்ள வேண்டும். தமிழீழ விடுதலைக்கான போராட்டம் நிலங்களை விடுவிக்கும் அளவிற்கு முன்னேறியபோது, சிறீலங்கா அரசானது கடல் மூலமே தனது படைபலத்தைப் பிரயோகித்து, எமது முன்னேற்றத்தைத் தடுக்க முயன்று வருவதை, நாம் கண்டு வருகின்றோம். அதாவது, தரையுத்தத்தை வெல்ல எதிரி கடலையே பயன்படுத்தி வருகின்றான்.

1987 ஆம் ஆண்டு வடமராட்சியைக் கைப்பற்ற 'ஒப்பரேஷன் லிபரேஷன்' என்ற இராணுவ நடவடிக்கையைச் சிங்களப் படைகள் நடாத்திய போதும், 1990 ஆம் ஆண்டு முல்லைத்தீவு முகாமை நாம் வெற்றிகொள்ள முயன்ற சமயத்திலும், 1991 ஆம் ஆண்டு சிலாவத்துறை முகாமை நாம் கைப்பற்ற முயன்ற சமயத்திலும், 1991 ஆம் ஆண்டு ஆனையிறவுச் சமரின்போது எம்மிடம் வீழ்ச்சியடையும் நிலையில் இருந்த ஆனையிறவுத் தளத்தைப் பாதுகாக்கும் போதும். சிறீலங்கா அரசு கடல்வழிமூலமே தனது பலத்தைப் பிரயோகித்து, எமது முயற்சிகளுக்குக் குறுக்கே நின்றது.

இதற்குப் பிரதான காரணம் எமது கடலில் எதிரி வைத்திருந்த கடல் ஏகபோகம்தான்.

தலைவர் பிரபாகரன் அவர்கள் அடிக்கடி கூறுவார்: ''புவியியல் ரீதியாகத் தமிழீழத்தின் பாதுகாப்பு கடலோடு ஒன்றிப் போயுள்ளது. எனவே, கடற்பரப்பிலும் நாம் பலம் பொருந்தியவர்களாகி, எமது கடலில் எதிரி வைத்திருக்கும் கடல் ஆதிக்கத்தைத் தகர்த்து, எமது கடலில் நாம் பலம் பெறும் போதுதான், விடுவிக்கப்படும் நிலப்பகுதியை நிரந்தரமாக நிலைநிறுத்திக்கொள்வதுடன், தமிழீழததின் நிலப்பகுதிகளில் இருக்கும் எதிரிப் படையையும் விரட்டி'யடிக்க முடியும்.''

ஒரு கடற்படையை நாம் கட்டியெழுப்ப வேண்டுமாயின், ஏராளமான பொருட் செலவைச் சந்திக்க நாம் தயாராக இருக்கவேண்டும். தரைச் சண்டைகளுக்குப் பயன்படுத்தப்படும் ஆயுதங்கள், உபகரணங்களின் பெறுமதியைவிடக் கடற் சண்டைகளுக்குப் பயன்படுத்தப்படும் ஆயுத உபகரணங்களின் பெறுமதி மிக மிக அதிகமாகும். எனவே ஒரு கடற்படையைக் கட்டி வளர்க்கப் பொருளாதார பலமும் தேவை

தமிழீழத்தைப் பொறுத்தவரை வெளியுலகத் தொடர்புகளுக்கும், போராட்டத்திற்குத் தேவையான விநியோகங்களுக்கும், அதற்குரிய செயற்பாடுகளுக்கும் கடலே பிரதான வழியாக இருக்கின்றது.

எமது தரை எல்லையை (சிறீலங்காவுடனானது) இதற்கு நாம் பயன்படுத்த முடியாது.

எனவே போக்குவரத்து, விநியோகங்கள், உலகத் தொடர்புகள் யாவுமே கடல்மூலமே உள்ளன.

எனவேதான் எதிரி வைத்திருக்கும் கடலாதிக்கத்தைத் தகர்த்து, கடற்பரப்பில் அவனது நடமாட்டத்தைத் தடுக்க வேண்டியது, மிகமிக அத்தியாவசியமானது. அப்போதுதான் எமது தாயகப் போர் வெற்றிபெற முடியும்.

1984 ஆம் ஆண்டிலிருந்து கடற்புலிகள் என்ற பெயரால் அழைக்கப்பட்ட எமது கடல் அணி, 1991 ஆம் ஆண்டு பிற்பகுதியில், 'விடுதலைப் புலிகளின் கடற்புலிகள்' என்ற புதிய பெயருடன் பெரியளவில் விரிவாக்கம் செய்யப்பட்டது.

இக்காலத்தில் இதன் சிறப்புத் தளபதியாக சூசை அவர்களும், தளபதியாக கங்கை அமரன் அவர்களும் நியமிக்கப்பட்டிருந்தனர்.

இக்காலத்திலேயே சிறீலங்காக் கடற்படையினர்மீது கடலில் வைத்தும், கடற்கரையோரங்களில் உள்ள காவல் அரண்கள் மீதும், பல வெற்றிகரமான தாக்குதல்களைக் கடற்புலிகள் நிகழ்த்தினர்.

இத்தொடரான தாக்குதல்களின்போது, கனரக ஆயுதங்கள் பொருத்தப்பட்ட விசைப் படகுகள் சில, பல்வேறு முனைகளிலும் தாக்கி அழிக்கப்பட்டன.

ஆனையிறவுக் கடல்நீரேரியில் வைத்து 41 அடி நீளமான அதிவேகச் சண்டைப் படகொன்று, கடற்புலிகளால் மூழ்கடிக்கப்பட்டது. அத்துடன், நடுக்கடலில் வைத்துச் சிங்களக் கடற்படையுடன் வெற்றிகரமான படகுச் சண்டைகளிலும் கடற்புலிகள் ஈடுபட்டுள்ளனர்.

இக் கடற் தாக்குதல்களிலும் கடற் சண்டைகளிலும் கணிசமான சிங்களக் கடற்படையினர் கொல்லப்பட்டதுடன், அவர்களிடம் இருந்து ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன.

கடற் கண்ணித் தாக்குதல்களை நிகழ்த்துவதில் இருந்து, நவீன மயப்படுத்தப்பட்ட சிங்களக் கடற்படைக்கெதிராக நேரடித் தாக்குதல்களையும், கடற் சண்டைகளையும் நடத்தக்கூடிய அளவிற்கு விடுதலைப் புலிகளின் கடற்புலிகள் அணியினர் பெற்ற வளர்ச்சி, சிறீலங்காவின் படைத்துறைத் தலைமையைத் திணறடித்துள்ளது. இதன் காரணமாக, கடற்படையின் பலத்தை நம்பிப் போராட்டத்தை நசுக்க அவர்கள் உருவாக்கிய நீண்டகால நோக்கிலான போர்முறைத் திட்டமும் கேள்விக் குறியாகி விட்டது.

அத்துடன் அண்மைக் காலத்திலிருந்து, தமிழீழக் கடற்பரப்பில் சிறீலங்காக் கடற்படையின் மேலாதிக்கம் படிப்படியாகச் சரிந்துகொண்டிருப்பதையும் காணலாம். அதனால் தமிழீழம் மீதான தனது ஆக்கிரமிப்புப் போர் மிகப் பெரிய பின்னடைவை எதிர்நோக்குவதையும், சிங்கள ஆளும் வர்க்கம் உணரத் தொடங்கியிருக்கும்.

தமிழீழக் கடலன்னை தியாகத்தாலும், சோகத்தாலும் உருவான ஒரு மகத்தான காவியத்தைத் தன்னுள் கொண்டிருக்கின்றாள்.

எத்தனை இனிய தோழர்கள்,

எவ்வளவு திறமையான கடலோடிகள்,

மீனுக்கு இணையான நீச்சல்காரர்கள்,

தியாகத்தின் உயர் வடிவமான கடற் கரும்புலிகள்!

சாவு வரும் என்பதைத் தெரிந்தும் இவர்கள் பயணம் போனார்கள். ஒவ்வொரு முறையும் அவர்கள் பயணம் போனபோது, கரையிலே நின்று கை வீசி அனுப்பி வைத்தோம். ஆனால் நாம் பார்த்துக்கொண்டிருந்த போதே, அந்தப் பரந்த கடலோடு கரைந்து போனவர்கள் பலர்.

தமிழீழக் கடலன்னையின் மடியிலேயே இரவும் பகலும் கிடந்து, பனியையும் குளிரையும், தம்முயிரையும் பாராது கடலோடிய தமிழீழத் தாயின் புதல்வர்களில் எத்தனையோ பேர், அந்த உப்பு நீருடனேயே சங்கமமானார்கள்.

இது எங்கள் கடல்; இது தமிழீழத் தாயகத்தின் இணைபிரியாத ஒரு அங்கம். அந்நியரின் ஆதிக்கத்திலிருந்து இது மீட்கப்பட வேண்டும். அதற்காகவே கடற்புலிகள் உயிரையும் மதியாது பயணம் போய், உன்னதமான தியாகங்களைப் புரிந்து, வீர காவியங்களைப் படைத்துக்கொண்டிருக்கிறார்கள்.

ஒரு நாள், நிச்சயமாக எங்களின் கடற்படைக் கப்பல்கள் எங்களின் கடலில் பவனிவரும்; அப்போது எங்களின் இளைய பரம்பரையினர் பயமின்றி, சுதந்திரமாக எங்களின் கடலில் உலாவருவார்கள். ○




*கடற் கரும்புலிகள் மேஜர் புவீந்திரன், கப்டன் மணியரசன்.*

*இது எங்கள் கடல். இது தமிழீழத் தாயகத்தின் இணைபிரியாத அங்கம். தரையோடு, இந்தக் கடலும் மீட்கப்பட்டே ஆகவேண்டும்.*

' விடுதலைப் புலிகள் ' - குரல் 29 இதழில் உள்ளடங்கியிருந்த இந்தக் கட்டுரை, இங்கு மறுபதிப்புச் செய்யப்பட்டுள்ளது.

# மிதக்கும் மினிமுகாம் மூழ்கடிக்கப்பட்டது



மிதக்கும் மினிமுகாம்: *சிறிய ரக போர்க்கப்பல் என வர்ணிக்கக்கூடிய 'டோரா' அதிவேகப் பீரங்கிப்படகு.*

எமது விடுதலைப் போரில், கடலைப் பொறுத்தளவில் 'டோரா' வகைச் சண்டைப் படகுகளைத் தரையிலுள்ள மினிமுகாம்களுக்கு ஒப்பிடலாம். அந்தளவிற்கு ஒரு டோரா அதிவேக சண்டைப்படகு சக்தி வாய்ந்தது. 9-12 பேர் அப்படகில் இருந்தாலும்கூட, அதன் ஆயுதபலம் தரையிலுள்ள மினிமுகாமைவிட அதிகமானது என்று கூறலாம். இரண்டு ஐம்பது கலிபர் துப்பாக்கிகளும், ஒரு இருபது மி. மீ. ரக பீரங்கியும், ஒரு தொலைத்தொடர்புக் கருவியும், சக்திவாய்ந்த ராடர் சாதனமும் ஒரு படகில் உண்டு.

இந்த 'மிதக்கும் மினிமுகாம்' அதிவேகமாக இடம்விட்டு இடம்மாறி, அகப்படும் மீனவர்களது படகுகளை - சிலவேளை புலிகளின் படகுகளையும் - தாக்கி மூழ்கடிக்கும். எமது விடுதலைப் போராட்டத்தில் கடலிலே புலிகள் இயக்கம் பறிகொடுத்த போராளிகளில் பெரும்பாலாரது இழப்பிற்கு, இந்த 'டோரா' வகைப் படகுகளே நேரடிக் காரணிகளாக இருந்துள்ளன.

இந்தவகைப் படகுகளில் 'சுப்பர் டோரா' என்ற சண்டைப் படகே, 29. 08. 1993 அன்று பருத்தித்துறைப் பெருங்கடலில் கரும்புலித் தாக்குதலுக்கு உள்ளாகி மூழ்கடிக்கப்பட்டதாகும். ஐந்து அதிகாரிகள் உட்பட பதின்மூன்று கடற்படையினர் இதில் கொல்லப்பட்டனர். மேஜர் புவீந்திரன், கப்டன் மணியரசன் என்ற இரு கடற் கரும்புலிகள் இச் சாதனையைப் படைத்து வீரச்சாவடைந்துள்ளனர்.

மூழ்கடிக்கப்பட்ட இந்த 'சுப்பர் டோரா', திருக்கோணமலையிலிருந்து காரைநகர் வரையிலான கடற் பகுதியில் தனது வழமையான கடல்ரோந்தில் ஈடுபட்டிருந்தபோதே, இந்தச் சம்பவம் நடந்தது.

கொழும்புப் பத்திரிகைகளின் படி - இந்தச் 'சுப்பர் டோரா' சண்டைப்படகு, முப்பது வயதுடைய லெப். விமலவீர என்ற அதிகாரியின் தலைமையில், மேலும் எட்டுக் கடற்படை வீரர்களைக் கொண்டிருந்தது.

திருக்கோணமலையிலிருந்து முல்லைத்தீவு வழியாக, வெற்றிலைக்கேணியை இந்த'சுப்பர் டோரா' வந்தடைந்தபோது, வேறு ஒரு டோரா படகின் கட்டளை அதிகாரி உட்பட மூன்று அதிகாரிகளும், 'மிட்சிப்மான்' என்ற தரத்திலான ஒரு தொண்டர்படை மாலுமியும், தத்தமது வேலைத்தளங்களுக்குச் செல்வதற்காக இந்த சுப்பர் டோராவில் ஏறிக்கொண்டனர்.

அவர்களின் விபரம் வருமாறு: லெப். ஜே. ஜி. புஞ்சிகேவா (இவர், பிறிதொரு டோரா படகின் அதிகாரி).

லெப். யூ. ஜி. ஏ. கே. திலகரட்ண (இவர், 'றணகஜ' என்ற தரையிறங்கும் கலத்தின் இரண்டாவது அதிகாரியாகக் கடமையாற்றியவர். அத்துடன் இருபது வருட கடல் அனுபவம்பெற்ற ஒரு அதிகாரி).

லெப். யூ.எஸ். செனநாயக்கா (இவர், பருத்தித்துறைக்கு நேரே நிறுத்தப்பட்டிருக்கும் கட்டளைக் கப்பலான 'எடித்தாரா' வின் ஒரு இடைநிலை அதிகாரி).


'மிட்சிப்மான்' சீ. ஜீ. புஞ்சிகேவா (இவர் தொண்டர்படை மாலுமி).

ஆதாரம்: 'சண்டே ஐலண்ட்' -செப். 1993)

இப்போது வெற்றிலைக் கேணியிலிருந்து அந்த 'சுப்பர் டோரா' படகு, பருத்தித்துறைக்கு நேரே நடுக்கடலில் நிறுத்தப்பட்டிருந்த கட்டளைக் கப்பலான எடித்தாராவை(இதன் பணி என்னவென்று 8 ஆம் பக்கம் பார்க்கவும்) நோக்கிச் சென்றுகொண்டிருந்தது. அங்கு லெப். செனநாயக்காவை இறக்கிவிடச் சென்றது. அங்கே போகும் வழியிலேயே-பருத்தித்துறைக் கரையிலிருந்து சுமார் 8 மைல் தொலைவில் - 'சுப்பர் டோரா' கடற்புலிகளால் தாக்கப்பட்டு மூழ்கடிக்கப்பட்டது. மூழ்கடிக்கப்பட்ட படகிலிருந்து இரண்டு 'ஐம்பது கலிபர்' துப்பாக்கிகளையும், இரண்டு 'இருபது மி.மீ.'பீரங்கிகளையும் இவற்றிற்குரிய ரவைகள் சிலவற்றையும் கடற்புலிகள் கைப்பற்றினர்.

இதேபோன்று 1991 இன் இறுதிப் பகுதியில் மாதகல் கடலில் வைத்து ஒரு டோரா படகு மீது கடற்புலிகள் கடற்கண்ணி வெடித் தாக்குதல் நடாத்தியிருந்தார்கள். ஆனாலும் அப்படகு சிறிய சேதத்துடன் தப்பிக்கொண்டது.

டோரா வகைப் படகுகளை விட சிங்களக் கடற்படையிடம் வேறுபல சண்டைப் படகுகள் இருந்தாலும்கூட, டோராவின் கடற்பயன்பாடு அதிகம் என்றே கூறவேண்டும். இஸ்ரேலில் கட்டப்பட்ட இந்த அதிவேகப் படகு, பல நாடுகளின் கடற்படையில் இடம்பிடிக்கும் அளவுக்கு மதிப்புவாய்ந்தது. மணிக்கு 40 கடல்மைல் வேகம் கொண்டது, இந்தச் சண்டைப் படகு.



# கடலோடு கரைந்த கடற் கரும்புலிகள்

'மகனைப் பார்த்து எவ்வளவு காலமாகிவிட்டது! இப்ப எப்பிடி இருப்பானோ?'

அம்மாவுக்கு ஏக்கம். மூன்றாண்டுகளுக்கு முன்பு திரும்பவும் சிங்களவர்கள் தாக்கத்துவங்கிய போது, ''புலிக்கு ...'' என்று புறப்பட்டுப் போனவன்தான். அதன் பிறகு அவர்கள் ஒருநாள்கூடக் காணவில்லை.

இடையில் ஒரு நாள் -

சண்டை ஒன்றில் மைன்ஸ் வெடித்து பிள்ளைக்குக் கால் போய்விட்டதாம் என்ற துயரச் செய்தி அம்மாவுக்கு எட்டியது.



தலைவர் அவர்களோடு கடற் கரும்புலிகள் கப்டன் மதன் மேஜர் வரதன்.

அம்மாவின் கண்களில் அருவி. வேதனையால் துடித்துக்கொண்டிருப்பானோ......? ''அம்மா......!'' என்று அழுவானோ.....? அவள் மகனையே நினைத்துக்கொண்டிருப்பாள். கொஞ்ச நாட்களாக அம்மாவின் இரவுகள் தூக்கமற்று நீண்டு கழிந்தன.

காலம் அசைந்தது -

''பிள்ளை இப்ப யாழ்ப்பாணத்திலையாம்...... கடற்புலியாக கிளாலியில நிக்கிறானாம் ... சிங்கள நேவியிட்ட இருந்து சனங்களைக் காப்பாத்துகிற வேலையாம்......'' அவர்கள் அறிந்தார்கள்.

'எவ்வளவு காலமாகிவிட்டது .....?எப்படி இருக்கிறானோ .....?' மகனைப் பார்க்க அம்மா ஆசைப்பட்டாள். பாசமும், ஆவலும் அவளை அவசரப்படுத்தியது.

சோதனைச் சாவடிகள். இராணுவக் கெடுபிடிகள். கொச்சைத் தமிழில் துளைத்தெடுக்கும் கேள்விகள். கிரானில் துவங்கி தாண்டிக் குளத்தில் முடிந்த துயரப் பயணத்தின் இறுதியில், அம்மா யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தாள்.

மட்டக்களப்பு தொடர்பகத்தில் பெயரைப் பதிந்து, பிள்ளைக்குத் தகவல் அனுப்பிவிட்டு ஆவலோடு காத்திருந்தாள். தங்கியிருந்த வீட்டின் வாசலையே பார்த்துக்கொண்டிருக்க ஒரு நாள் கடந்து போனது; ஆனால் மகன் வரவில்லை.

''கிளாலியில நேவிக்கு கரும்புலித் தாக்குதல் நடந்ததாம் ...... கனக்க நேவியும் முடிஞ்சுதாம்......'' என்று ஒருசெய்தி மட்டும் வந்தது.

எல்லோருக்கும் சோகம் கலந்த மகிழ்ச்சி. அம்மாவுக்கும்தான். மாலையானதும் பரபரப்பாகப் பேசப்பட்ட அந்தச் செய்தியைத் தாங்கி, 'ஈழநாதம்' விசேட பதிப்பு அம்மாவின் கைகளிற்கு வந்த போது...... அந்தப் படங்கள்......! அந்தப்படம்......! அம்மா உற்று உற்றுப் பார்த்தாள்...... கண்கள் இருண்டன......! உடல் விறைத்துப் போனது. நம்பவே முடியவில்லை. அம்மாவின் பிள்ளை......வரதன்...? அவன்தானா என்று பெயரை மீண்டும் மீண்டும் பார்த்தாள். ஆம்! அது அம்மாவின் பிள்ளையேதான். அள்ளிஅணைத்து முத்தமிட ஆசையோடு ஓடோடி வந்தாளே...... அதே பிள்ளைதான்.

கறியில்லாமல், காசுமில்லாமல் அடுப்பெரியாத நாட்களில்- ''சோறு காய்ச்சணை கறியோட வாறன்'' என்று, துவக்கெடுத்துக் கொண்டு காட்டுக்குப் போவானே...... அதே மகன்!

வீதியில் சிங்களப் படை மறித்து, கிறனேட்டைக் கையில்கொடுத்து ''வாயுக்குள்ள போடடா......'' என்றபோது, ''விருப்பமெண்டா உன்ர வாயுக்குள்ளபோடு .....'' என்று துணிவோடு திருப்பிக் கொடுத்துவிட்டு வந்தானே...... அந்த மகன்!

சோகத்தோடு அணைத்து நிற்கும் தலைவனுக்கருகில், பூரிப்போடு சிரித்து நின்றான் அந்தக் கரும்புலி.

தாங்கமுடியாத பெரும் சுமையாய் துயரம் நெஞ்சை அழுத்த - அம்மா அழுதாள். கவலையைத் தீர்க்க கண்ணீர் தீரும்வரை அழுதாள்.

* *

கந்தசாமி ஐயாவுக்கும் அம்மாவுக்கும் பிறந்த ஒன்பது குழந்தைகளுக்குள் நான்காவது வரதன். இராமச்சந்திரன் என்பது இயற்பெயர்.

1973ஆம் ஆண்டிற்குப் பிறகு, ஒவ்வொரு வருடமும், தமிழ்ப் புத்தாண்டிற்கு இரண்டு நாள் முன்னதாக வரதனின் பிறந்த நாள் வந்து போகும்.

கல்வியிலும், விளையாட்டுத் துறையிலும் ஆர்வம் மிகுந்தவனாக துடிப்புடன் பள்ளிக்குப் போனவனை, அப்பாவோடு வயலுக்குப் போகவைத்தது குடும்ப நிலை.

குடும்பச் சுமை பகிர்ந்து உழைத்து, 16 வயதுவரை வீட்டோடு இருந்தவனை இயக்கத்துக்குப் போக வைத்தது நாட்டுநிலை.

மன்னம்பிட்டிக்குக் கிழக்கே 15 மைல் தூரத்திலுள்ள கள்ளிச்சை வடமுனைதான் ஊர். ஆக்கிரமிப்பின் கொடிய வலியை அனுபவிக்கும் எங்கள் தாயகத்தின் எல்லைக் கிராமங்களில் ஒன்று.

மட்டக்களப்பில் பயிற்சியை முடித்தவனுக்கு அங்கு கண்ணி வெடிப் பிரிவில் பணி.

சிங்களப் படையுடன் மீண்டும் போர் துவங்கி - வெடியோசைகளால் நிறைந்து, நகர்ந்துகொண்டிருந்தநாட்களுள் ஒன்று. கள்ளிச்சை வடமுனைக்கும் - பெண்டுகல் சேனைக்கும் இடையில் எதிரி விதைத்துவிட்டுப் போயிருந்த மிதிவெடிகளுள் ஒன்று, விநியோக வேலைகளில் ஈடுபட்டிருந்த வரதனின் வலது காலைப் பிய்த்தது.

காட்டு முட்கள் கீறிக் கிழிக்க நரக வேதனைக்கு நடுவில் யாழ்ப்பாணம் கொண்டுவரப்பட்டான் வரதன். சிகிச்சை முடிய புகைப்படப் பிரிவில் பணி.

* *

கிளாலியிலிருந்த கடற்புலிகளின் தளம்.

எங்கள் அன்புக்கினிய மக்களை, இரத்தப்பசி கொண்டலையும் இனவாதப் பேய்களிடமிருந்து காத்து நிற்கும் உன்னத பணியில் அவர்கள்.

இரவில் விழித்திருந்து அலைமடியில் காவல். பகலை இரவாக்கித் தூங்க முயலும் வாழ்வு.

முகாமில் எப்பொழுதும் கலகலப்பை நிறைத்திருப்பவன் மதன்தான். துடிதுடிப்பான சுபாவம் அவனுடையது.

வரதனும், மதனும் உற்ற நண்பர்கள். புகைப்படப் பிரிவில் ஒன்றாக வேலைசெய்தபோது மெல்ல அரும்பிய உறவுதான் - இன்று உயிருக்குயிரான சிநேகிதமாக இறுக்கம் பெற்றிருந்தது.

ஒன்றாகத் தலைவருக்குக் கடிதம் எழுதி, ஒன்றாகக் கடற்புலிகளுக்கு வந்து, ஒன்றரைக் கால்களோடு நீந்திப் பழகி, பயிற்சி பெற்று, படகேறிக், கடலில் களமாடி, ஒன்றாகக் கிளாலியிலும் பணி செய்தவர்கள் ஒன்றாகக் கரும்புலிக்கும் பெயர் கொடுத்து, இறுதியிலும் ஒன்றாகவே போனார்கள்.

* *

மதன் துடி துடிப்பானவன். ஒற்றைக் காலில்நின்று கூத்தாடி... ஊன்று தடியோடு துள்ளியோடி...... கும்மாளமடித்தபடி திரிந்து .....அவன் ஓய்ந்ததேயில்லை.

திருமலைக் காட்டில் மிதிவெடி ஒன்று கழட்டிவிட்ட இடதுகாலுக்குப் பதிலாக மதனுக்கு ஜெய்ப்பூர் கால் கொளுவப்பட்டிருந்தது. பொய்க்காலைக் கழற்றிவிட்டு, ஒன்றரைக் காலில் மரத்திலேறி மாங்காயும் இளநீரும் பிடுங்கித் தந்து, எங்களோடு சேர்ந்திருந்து சாப்பிட்டு மகிழ்ந்த உயர்ந்த நண்பன் அவன்.

இரவெல்லாம் படகோடி கடலில் சமராடிவிட்டு, பகலில் ஓய்வெடுத்துத் தூங்கமுயலும் தோழர்களை ஊன்றுதடியால் தட்டிக் குழப்பித் தொந்தரவு செய்துவிட்டுத் துள்ளி ஓடி அவர்களுடைய அன்பான சினப்பிற்கும் ஆளாகின்றவன் அந்தக் குழப்படிகாரன். அவன் கூடத்தானும் இரவு சண்டைக்குப் போயிருப்பான்; ஆனால் பகலிலும் ஓடித்திரிவான்.

சண்டைக்குத் தயாரான ஓடுபாடுகள் இல்லாத - ஓய்வான ஒரு மாலைப்பொழுதில் - மதன் ஒரு தென்னைமர அடியில் சாய்ந்திருப்பான். கடற்காற்றோடு கலந்து ஒரு பாடல் விரியும். தன்னுடையது பாடுவதற்கு ஏற்ற ஒரு குரல் இல்லையென்பது தெரிந்திருந்தும் அவன் பாடுவான். அதில் ஒரு கவர்ச்சியிருக்கும்; அருகிலிருப்பவர்களை ஈர்க்கும்.

எப்போதும், எதிலும் கவனமில்லாத ஒருவனைப்போல பகிடி சொல்லித் திரிகின்ற மதன், தனது திறமையை வேலைகளின்போது செயலில் காட்டுவான். எங்களால் செய்யமுடியாமல் போகிற சில சில வேலைகளை, ஒரு காலை இழந்தவனாயிருந்தும் அவன் செய்து முடிப்பான். பெரும்பாலும் தவறுகள் செய்யாமலே இருக்கின்ற மதன், சக தோழர்கள் தவறு செய்யும் போது சொல்லித் திருத்துகின்ற போராளி.

மதனுக்கிருந்த இயல்பான குழப்படித்தனத்தால், வரதனோடு துவங்கிய ஒரு பகிடிச்சண்டை கடைசியில் சீரியசாக முடிந்தது. அந்த உயிர் நண்பர்கள் கதைக்காமல் பிரிந்துபோய்விட்டார்கள். அடுத்த 24 மணி நேரம் வெறுப்பூட்டுவதாகக் கழிந்தது. வரதன் குளிக்கப் போனான். எப்போதும் இருவரும் சேர்ந்தே போவார்கள்; இப்போது வரதன் தனியே. முகத்தைத் தொங்கப்போட்டுக்கொண்டு மதன் ஒரு மரக்குத்தியிலிருந்து பார்த்துக் கொண்டிருந்தான். ''போ'' என்று நட்புத் தூண்டவும் தன்மானம் தடுத்தது. ஆனாலும், அன்பே வென்றது. ஊன்றுதடியுடன் துள்ளிக்கொண்டு முந்தி ஓடிப்போய் வாளியை எடுத்து, வரதனுக்குக் குளிக்கவார்க்கத் தொடங்கினான் அவன். சேரனிடம் இதைச் சொல்லும்போது வரதனின் கண்கள் பனித்திருந்தன.

வரதன் அமைதியானவன் அதிகம் பேசத் தெரியாதவன். கதைகளைவிட செயல்களிலேயே அதிக ஈடுபாடும் நம்பிக்கையும்கொண்டவன். ''கதைக்கும்போதெல்லாம் இயக்கத்துக்குப் பயன்படக்கூடியதாய் ஏதுங்கதையுங்கோடா'' என்று எங்களுக்குப் புத்தி சொல்பவன். அது, வெளியில் தெரியாமல் தனக்குள்ளேயே குமுறிக் கொண்டிருந்த ஓர் எரிமலை.

அம்மா அப்பாவைப் பிரிந்து, உறவுகளைப் பிரிந்து நீண்ட

காலம். எங்கு இருக்கின்றார்களோ......? ஆமிப்பிரச்சினைகளால் ஒடுப்பட்டுத் திரிகின்றார்களோ......? வீட்டுக்கு ஒரு கடிதம் எழுதிப் பார்ப்பம் என்ற ஆவல் வரதனுக்கு எழுந்தது. வரதன் கடிதம் எழுதினான்; பதிலுக்காகக் காத்திருந்தான். அடுத்த தரம் எழுதினான்; காத்திருந்தான். பதிலில்லை. மூன்றாம்தரம் - பதிலில்லை. நான்காவது கடிதமும் போனது; பதில் வரவே இல்லை.

இடம்பெயர்ந்து வந்து கிளாலியில் இறங்கிய உறவினர்கள் சிலரை எதிர்பாராமல் வரதன் சந்திக்க நேர்ந்தது. ''ஒரு இரவு ஊருக்குள்ள ஆமி புகுந்து வெட்டியும், சுட்டும் நூற்றுக் கணக்கில சனங்களைக் கொண்டவங்கள்... தம்பி ...... தப்பி ஓடிவந்த எங்களுக்குள்ள உன்ரை வீட்டுக்காரர் வரேல்லை ..... என்ன நடந்ததோ...? கடவுளுக்குத்தான் தெரியும்!'' வானத்தைப் பார்த்து கைகளை விரித்துச் சொல்லிவிட்டு, ஒரு பெருமூச்சோடு அவர்கள் போய்விட்டார்கள்.

காதுகளில் இடியென இறங்கிய செய்தியால் அவன் துடித்துப் போனான். ஏற்கெனவே அவனுக்குள் வீசிக்கொண்டிருந்த புயல் ஆவேசம்கொண்டெழுந்தது. ஆனாலும் அது ஒரு வதந்தி மட்டுமே என்பது, கடைசிவரை அவனுக்குத் தெரியாமலே போய்விட்டது.

*   *

**கிளாலியின் விரிந்த கடல்.**

தமிழர்களின் இரத்தமே அலைகளாய் அசையும் 20 மைல் நீளச் செந்நீர்ப்பரப்பு.

இரத்தப்பசிகொண்டு அலையும் சிங்களப் படை. உயிர் விழுங்கும் துப்பாக்கி வாய்களோடு காத்து நிற்கும் மரணவலையம். அந்த மரண வலையத்திலும் - கடலரண்களாய் கடற்புலிகள் காவல் நிற்க, எங்கள் மக்கள் துணிவுடன் பயணிக்கும் குடாநாட்டுக்கான தனியொரு பாதை.

நாகதேவன்துறையில் பொருத்தப்பட்டிருக்கும் சக்திவாய்ந்த ராடர்களின் திரைகளில் புள்ளிகளாய் அசையும் எங்கள் படகுகளை, துல்லியமாக இனம் கண்டு தாக்கி மூழ்கடிக்க விரைந்து வரும் எதிரிப் படகுகளை, உள்ளங்கையைக் கூடப் பார்க்க முடியாத கும்மிருட்டிலும்கூட, கண்களை மட்டுமே நம்பி எதிர்கொண்டு விரட்டியடிக்கும் சாதனைக் களம்.

எதிரி தடை செய்த வலையத்தை எதிரிக்குத் தடைசெய்து வீர சாதனை படைக்கும் கடற்புலிகளின் போர்த்திறனையும், அதனைப் பிரமாண்டமான ஒரு வளர்ச்சி நிலையை நோக்கி உயர்த்திச் செல்லும் தலைவர் பிரபாகரனின் முயற்சியையும், ஆற்றலையும் உலக அரங்கில் பறைசாற்றிக் கொண்டிருந்த போர்முனை.

கிளாலிக் கடலில் மக்கள் போக்குவரத்துச் செய்யத்துவங்கிய நாளிலிருந்து அங்கு காவல் பணியாற்றிக்கொண்டிருக்கும் கடற்புலிகளின் அணி, வரதனையும் மதனையும் கொண்டிருந்தது.

அந்தக் கடற்களத்தில் புலிகள் எதிரியைச் சந்தித்த ஒவ்வொரு சண்டையிலும், இவர்களின் கைகளிலிருந்து துப்பாக்கிகள் கனன்றிருக்கின்றன.

விடிகாலைகளில், பயணம்போன எம்மக்கள் செத்தபிணங்களாய்க் கரையொதுங்கிய போதெல்லாம், அவர்களுக்குள் ஒரு நெருப்பு கொழுந்துவிட்டெரியும்.

அவர்கள், துணிகரமான சண்டைக்காரர்கள். அவர்களுடைய வண்டிகளில், எதிரியின் படகுகளை மூக்குக்கு நேரே எதிர்கொண்டு அவனைத் திகைப்பிலாழ்த்துவார்கள். கண்ணைக்கட்டி இருளில் விட்டது போன்ற இருட்டிலும் எதிரியின் படகுகளை இனம் கண்டு- நல்ல வியூகங்களில் தளம்பலின்றி வண்டியைச் செலுத்தி - அவனைத் தாக்கித் திணறடிப்பார்கள். அந்த மயிர்க்கூச்செறியும் கணங்களில் எதிரி தலை தெறிக்க ஓட்டமெடுப்பான். அந்த நேரங்களில் அவர்கள் சொல்வார்கள்: ''இப்பமட்டும் ஒரு சக்கை வண்டி இருக்குமெண்டால், இவங்களின்ரை கதை இதிலையே முடியும்.''



தலைவரோடு வரதன்

*''.. தலைவர் சொன்னதையே நான் திரும்பத்திரும்ப நினைச்சுக்கொண்டிருக்கிறன். எனது சிந்தனையெல்லாம் அதிலையே இருக்கு...''*

அவர்கள் ஒரு கரும்புலித் தாக்குதலுக்காகக் காத்திருந்தார்கள். ''எங்களின் மக்களைக் கொன்றொழித்தவர்களை இதே கடலில் வைத்துக் கொன்றொழிக்க வேண்டும்'' என்ற வீர சபதம், அவர்களின் இதயங்களில் முழங்கிக்கொண்டிருநதது. கரும்புலித் தாக்குதலை நடாத்தும் இரவை, அவர்கள் ஒவ்வொரு நாளும் எதிர்பார்த்திருந்தார்கள்.

''ஏன் கரும்புலியாகப் போகின்றீர்கள்?'' என்பதற்கு, ஒரு தத்துவார்த்த விளக்கத்தை அளிக்கக்கூடிய அறிவை அவர்கள் பெற்றிருக்கவில்லையாயினும், அதன் தேவையை - அதன முக்கியத்துவத்தை - அதன் பலத்தை - உளப்பூர்வமாகவும் தெளிவாகவும் உணர்ந்துகொண்டவர்களாக அவர்கள் இருந்தார்கள்.

வரதன் ஆழ்ந்து சிந்தித்துக் கொண்டிருப்பான். அருகில் போகிற நண்பனிடம் ''தலைவர் சொன்னதையே நான் திரும்பத் திரும்ப நினைச்சுக்கொண்டிருக்கிறன். எனது சிந்தனையெல்லாம் அதிலையே இருக்கு. அந்த ஒரு நொடிப்பொழுதுக்காக நான் எவ்வளவு காலமும் காத்துக் கொண்டிருப்பன். என்றோ ஒரு நாள் கிளாலிக் கடலில ஒரு 'வோட்டர் ஜெற்' நொருங்கும்'' என்பான்.

மதனும் அப்படித்தான். அவன் அடிக்கடி சொல்லுவான், ''எங்கட எவ்வளவு சனங்களின்ரை ரத்தம் இந்தத் தண்ணியோட கலந்திது. இதுக்கெல்லாம் ஒரு நாளைக்குப் பாடம் படிப்பிச்சே ஆகோணும். அதை நான் சாதிச்சே தீருவன். அவனுகளையும் இந்தக் கடலிலையே அழிக்கவேணும்.''

மதன் மட்டக்களப்பைச் சேர்ந்தவன். சீனிவாசன் சிவகுமார் என்பது அவனுடைய இயற்பெயர். 1975ஆம் ஆண்டு, செப்ரெம்பர் திங்கள் 7ஆம் நாள், அந்த வீர மைந்தனைப் பெற்றாள் ஒரு வீரத்தாய். குடும்பத்தில் மூன்று அண்ணன்களுக்கும், ஒரு தங்கைக்கும் இடையில் அவன். மட்டக்களப்பு இந்துக்கல்லூரியில் 9ஆம் வகுப்பில் படித்துக்கொண்டிருக்கும் போது 1989 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் ஒரு நாள், பள்ளிக்கூடத்திற்கென்று புறப்பட்டுப்போனவன் திரும்பிவரவில்லை; ''இயக்கத்துக்குத்தான் போயிருப்பான்...'' என்ற வீட்டிலுள்ளவர்களின் ஊகிப்பும் பிழைத்துவிடவில்லை.

*   *

கிளாலியின் கடற்போர் முனை.

ஏறக்குறைய 60 நாட்கள் அலைகள் போல அசைந்து கடந்துவிட்டன.

அந்த உயரிய சாதனையை நிகழ்த்த அவர்கள் கடலுக்குப் போய்ப்போய்த் திரும்பி வரவேண்டியிருந்தது. நாட் செல்லச்செல்ல அவர்களுடைய உறுதி இறுகிக் கொண்டே போனதேயன்றி, இளகியதில்லை.

ஒவ்வொரு தடலவயும் சண்டை துவங்கும். துப்பாக்கிக் குழாய்கள் சிவக்க எங்களது படகுகள் பகைவனை எதிர்கொள்ளும். 'சக்கை' வண்டி அவனை மின்னலென நெருங்கும். எதிரி ஓட்டமெடுப்பான். சக்கை வண்டி கலைக்க இடைவெளி குறுகும். எதிரியின் வேகம் கூடும். அதிகரித்த வேகத்தோடு சக்கை வண்டி அண்மிக்க, ஒரு அடி உயர நீரில் ஓடக்கூடிய தன் நவீன படகை எதிரி ஆழம் குறைந்த நீர்ப் பரப்பினூடு செலுத்துவான். சக்கைப் படகுகள் தரை தட்டும். தொடர்ந்தும் கலைக்க முடியாமல் கரும்புலிகள் திரும்ப வேண்டியிருக்கும்.

மறுநாள் -

முகாமின் ஒரு மூலையில் முகத்தைத் தொங்கப்போட்டுக்கொண்டு இருப்பார்கள். இரவு தங்களால் இடிக்க முடியாமல் போய்விட்டதே என்பதற்காக, அவர்கள் கவலைப் பட்டுக்கொண்டிருப்பார்கள். 61 நாட்களும் இப்படித்தான் நகர்ந்தன.

*   *

25. 08. 1993.

வழமையான இரவு.

நிலவு உலா வராத இருண்ட வானம்.

சிலிர்ப்பூட்டும் குளிர்.

உடலுக்கு அசதியைத் தந்தாலும், உள்ளத்துக்கு உற்சாகமூட்டும் உவர்க்காற்று.

கடற்புலிகள் காவல் உலா வர- மக்களின் பயணம் துவங்கிவிட்டது.

சக்கை நிரப்பிய 'புலேந்திரன்' 'குமரப்பா' வில் மதனும் வரதனும் தயாராக நின்றார்கள்.

கடந்துபோனவைகளைப் போல அல்லாமல் இந்த 62 ஆவது நாளின் இரவில், அவர்களின் முகங்களில் நம்பிக்கையின் தெறிப்பு; இனம்புரியாத பூரிப்பு.

அருகில் நின்ற கண்ணாளனிடம் குப்பியைக் கழற்றிக்கொடுத்து விட்டு மதன் சொன்னான்: ''இண்டைக்கு இடிச்சே தீருவன். திரும்பி வரமாட்டன்.''

நேரம் நடு இரவைத் தாண்டியிருந்தது. நாகதேவன்துறைத் தளத்திலிருந்து அலைகளைக் கிழித்துக் கொண்டு முன்னேறினான் எதிரி. இன்று அவனது தாக்குதல் வடிவம் வித்தியாசமானதாக இருந்தது.

ஒவ்வொரு தடவையும் மாறுபட்டதாக இருக்கின்ற போதிலும் இன்று அவன் அமைத்து வந்த வியூகம் புதுவிதமானது. இரண்டு அணிகள். ஒன்று ஒருபுறத்தில் புலிகளைத் தடுக்க, மற்றையது மறுபுறத்தில் மக்களைத் தாக்கும்.

ஆனால், பகைவன் சற்றும் எதிர்பாராதவிதமாக அவனை இருமுனைகளிலும் எதிர்கொண்டனர் கடற்புலிகள். துப்பாக்கி முனைகள் தீ உமிழ, வானம் விழாக்கோலமானது.

சண்டை உக்கிரமடைந்துகொண்டிருந்த ஒரு கட்டத்தில், காத்திருந்த 'புலேந்திரன்' படகை 'வோக்கி' அழைத்தது. மதன் ஆவலோடு பதில் கொடுத்து, கட்டளைக்குக் காதுகொடுத்தான்.

மக்களைத் தாக்கவந்த எதிரி, புலிகளிடம் சிக்கிப்போயுள்ள முதலாவது சண்டை முனையில் - ஏற்கெனவே விளங்கப்படுத்தப்பட்டிருந்த தாக்குதல் திட்டத்தின்படி - 'வோட்டர் ஜெற்' படகொன்றைத் தாக்குமாறு வோக்கி கூறியது.

சுற்றியிருந்த தோழர்கள் கண் கலங்க, சிரித்த முகத்தோடு மதன் புறப்பட்டான். மின்னல் கீற்றென நெருங்கிய கரும்புலிப் படகைக் கண்டு எதிரி தப்பி ஓட முயல, அதற்கு அவகாசமில்லாமல், மதன் அதன் மையப்பகுதியோடு மோதினான். பிரகாசித்தெழுந்த ஒளி வெள்ளம் மறைந்து, இருளோடு இருளாகக் கரும்புகை கரைந்து கொண்டிருக்கும்போது. இரண்டாகப் பிளந்து மூழ்கிக்கொண்டிருந்த 'P 115' இலக்க வோட்டர் ஜெற்றிலிருந்து புலிகள் ஆயுதங்களை எடுத்துக்கொண்டிருந்தார்கள்.

தான் நேசித்த கடலோடும்...... காற்றோடும்...... எங்கள் மதனும்... அவனது 'புலேந்திர'னும்...

அந்தக் கடற்களம் நீண்டுகொண்டிருந்தது. கடற்புலிகள் கடலில் சந்தித்த முதலாவது பெருஞ் சமர் அதுவாகத்தான் இருக்கமுடியும்.

புலிகளைத் தாக்க வந்த அணியை புலிகள் தாக்கிக்கொண்டிருந்த இரண்டாவது சண்டை முனையிலிருந்து, 'குமரப்பா' படகிற்கு அழைப்பு வந்தது. காத்துக் கொண்டிருந்த வரதன், களத்திற்கு விரைந்தான்.

புலிகளின் சண்டைப் படகுகளால் வளைக்கப்பட்ட நிலையில், தப்ப வழியின்றி தளத்துக்குத் தகவல் அனுப்பிவிட்டு உதவி வரும் வரை சண்டையிடத் தீர்மானித்துவிட்ட ஒரு 'வோட்டர் ஜெற்'படகு, வரதனின் இலக்கு. 'வோக்கி' அவனுக்குத் தாக்குதல் வழிமுறையை வழங்கியது. உதவி கிடைக்குமுன் அதனை உடைக்க வேண்டும்.

இருள். ஆளை ஆள் பார்க்க முடியாத இருள். வளைத்து நிற்கும் புலிகளின் படகுகளை அவதானித்து - விலத்தி ஓடி, 'வோட்டர் ஜெற்'றை சரியாக இனம் கண்டு - அது அவனுடையதுதான் என்பதை உறுதிப்படுத்தி இடிக்க வேண்டும். தவறுதலாக எங்களுக்குள் முட்டுப்பட்டாலோ விளைவு விபரீதமானதாக மாறிவிடும்.




**கரும்புலி கப்டன் மதன்**

சரியான இலக்கை நோக்கி வரதன் நெருங்கினான் - அதிகரித்த வேகத்தோடு. திகைத்த எதிரி எதுவுமே செய்ய முடியாமல் மலைத்துப் போய் நிற்க, அடுத்த கணப்பொழுதில்......! அந்தக் கண்ணிமைக்கும் நேரத்திற்குள்..! எதிரியின் படகு... எங்கள் அன்பு வரதனும் 'குமரப்பா'வும் தான்......

நாகதேவன்துறையிலிருந்த கடற்படைத் தளத்தில் தகவல் தொடர்பு சாதனம், 'P 121' என்ற தங்கள் போர்ப்படகை அழைத்துக்கொண்டிருக்க, மூழ்கிக்கொண்டிருந்த அந்தப் படகிலிருந்து, கடற்புலி வீரர்கள் ஆயுதங்களை எடுத்துமுடித்துவிட்டார்கள்.

ஒரே பாயில் படுத்து, ஒரே கோப்பையில் சாப்பிட்டு, ஆளுக்காள் தண்ணி ஊற்றி - ஊத்தை தேய்த்து ஒன்றாகவே குளித்து, ஒரே இலட்சியத்தோடு வாழ்ந்த அந்த உயிர் நண்பர்கள் - கிளாலிக் கடலில் நடநத ஒவ்வொரு சண்டையின்போதும், ஒன்றாகவே நின்று, சிங்களப் பிணந்தின்னிகளை நெருப்பெனச் சுட்டெரித்தவர்கள்- சாகும்போதுகூட ஒன்றாகவே போனார்கள். எங்களுக்காக ..... மக்களுக்காக......! ○

# கடலன்னையின் புதல்வர்கள்



தலைவர் அவர்களோடும், தளபதி சூசை அவர்களோடும் - கரும்புலிகள் புவீந்திரனும், மணியரசனும்.

''உங்கள் வாழ்வின் உச்ச உயர்நாள் அதுவாகத்தான் இருந்திருக்கும். உள்ளப் பூரிப்பின் சிகரங்களைத் தொட்டிருக்கக்கூடிய அந்த நாளில் – உங்கள் மன உணர்வுகள் எப்படியிருந்திருக்கும் என்பதை வார்த்தைகளால் வடித்தெடுக்க முடியாது.''

புவீந்திரன்! அவன் ஒரு குழந்தை.

வயதுதான் பதினெட்டேயன்றி மனதால் அவன் பாலகன்.

மனித வாழ்வின் நெளிவு சுழிவுகள் அவனுக்குத் தெரியாது சமூக அமைப்பின் ஏற்றத் தாழ்வுகள் அவனுக்குப் புரியாது. அவனுக்குத் தெரிந்ததெல்லாம் யாரோ-எவரோ - அடுத்தவர்களுக்காகப் பாடுபட வேண்டும் எல்லோருக்கும் உதவி செய்ய வேண்டும் என்பது மட்டும்தான்.

சின்ன வயதிலிருந்தே அவன் அப்படித்தான் இரக்க சிந்தையும் - உதவும் குணமும் அவனது உயிரோடு ஒட்டிப்போயிருந்த இயல்புகள்.

பக்கத்து வீட்டு அம்மா வந்து ''தம்பி, ஒருக்கா அந்தக் கடைக்குப் போட்டு வாறியா அப்பன்?'' என்றால், சொந்த வீட்டு வேலையைப் பாதியிலேயே போட்டுவிட்டு எழுந்துபோய் விடுகின்றவன் அவன்.

ஊரில் எவருடைய வீட்டிலாவது, ஒரு நல்லது கெட்டது என்றால், அங்கு அந்தச் சிறுவன் ஏதாவது எடுபிடிவேலைகள் செய்துகொண்டிருப்பான்.

சப்பாத்து கட்டாயம் அணிய வேண்டிய அவனது பள்ளிக்கூடத்தில் - ஏழை நண்பனொருவன், ''அம்மா காசுக்கு கஸ்டப்படுறா......'' என்று மனவேதனைப்பட்ட போது. அப்பா ஆசையாக வாங்கித் தந்த சப்பாத்தைக் கழற்றிக் கொடுத்துவிட்டு, வெறுங்காலோடு வீட்டிற்கு வந்தவன் அவன்.

குடும்பத்தின் ஏழ்மை நிலையைச் சொல்லி, ''காலையில கூடச் சாப்பிடேல மச்சான்......'' என்று விம்மிய உற்ற நண்பனிடம் - அவன் அடியோடு மறுக்கமறுக்க - கையில் கிடந்த தங்கச் சங்கிலியையே கழற்றிக் கொடுத்துவிட்டு வந்தவன் தான் புவீந்திரன்.

ஒரு மென்மையான உள்ளம் அவனுடையது. அவன் கோபமடைந்ததை நாங்கள் கண்டதில்லை. அப்படித்தான், சுய கட்டுப்பாட்டை மீறிக் கோபம் வந்தாலும் அது விநாடிக் கணக்கில் கூட நீடித்ததில்லை. அவனுடைய உதடுகள் கெட்ட வார்த்தைகளை உச்சரித்ததை ஒரு நாள்கூட நாங்கள் கேட்டதில்லை.

வீட்டில் அக்கா தம்பியோடு என்றாலும் சரி, பிற்காலத்தில் - இயக்க நண்பர்களோடு என்றாலும் சரி, சாதாரண சிறு சச்சரவு வந்தால்கூட அவன் தன்னைத் தானே நொந்துகொள்வானே தவிர, மற்றவர்களை அல்ல. சரி எது பிழை எது என்பதெல்லாம் அவனுக்குத் தெரியும்; ஆனால், நியாயம் கதைக்க மாட்டான். போய் ஒரு மூலையில் இருந்து விக்கி விக்கி அழுதுகொண்டிருப்பான்.

அது பாசத்தால் பிணைந்திருந்த ஒரு குடும்பம். அக்காவிலும் தம்பியிலும் அன்பு நிறைந்த சகோதரனாக அவன் இருந்தான். அப்பாவுக்கு எல்லாமே குழந்தைகள் தான். குழந்தைகளுக்கு எல்லாமே அம்மாதான்.

அவனுக்குப் 12 வயதாய் இருக்கும்போது அந்தத் துயரம் நிகழ்ந்தது திருக்கோணமலையிலிருந்த உறவினர்களிடம் போன அம்மா திரும்பி வரவில்லை; அந்தக் குழந்தைகள் பார்க்க முடியாத இடத்திற்கு இந்தியர்கள் அம்மாவை அனுப்பிவிட்டார்கள். இனி எப்போதும் அவள் வரமாட்டாள்.

புவீந்திரன் அழுதான். அப்போது அவனுக்கு அது மட்டும்தானே தெரியும் - ஆனால், அம்மாவின் இழப்பு அந்தப் பிஞ்சு உள்ளத்தில் ஆழமான ஒரு வடுவை ஏற்படுத்தியது.

ஓய்வாக இருக்கும் கருக்கல் பொழுதுகளில், அப்பா குழந்தைகளுக்கு ஆங்கிலப்படக் கதைகள் சொல்லுவார் சுதந்திரத்தை நோக்கிய எழுச்சிகளைத் தழுவியதாக அவை இருக்கும். வியட்நாம், கியூபா, தென்னாபிரிக்கா என அது நீளும். புவீந்திரன் மட்டும் ஆர்வத்தோடு இருந்து கேட்பான் ஏற்கெனவே ஏழைகளுக்காகவும் பாதிக்கப்படுகின்றவர்களுக்காகவும் இரங்குகின்ற அந்த மனம், படக்கதைகளைக் கேட்கும்போது, ஒடுக்கப்படும் மக்களினங்களை நினைத்துப் பரிதாபப்படும். அவர்களின் அவலங்களை மனத்திரையில் போட்டுப் பார்த்துக் கொதிக்கும். அந்தப் போராட்டங்களின் நியாயத் தன்மையைப் புரியும். அடக்குகின்றவர்கள் அழிக்கப்பட வேண்டியவர்கள் என்பதை உணரும். அந்த மக்களோடு எங்களினத்தை ஒப்பிட்டுப்பார்த்து விழிக்கும் எங்கள் மக்களின் விடுதலைக்கான போராட்டத்தில் தானும் ஈடுபட வேண்டுமென இறுகும்.

இந்த விழிப்புணர்வோடும் - மனவுறுதியோடும், இதயத்தைப் பிழியச் செய்கிற அம்மாவினுடைய நினைவுகளும் சேர்ந்துதான் - அவனை இயக்கத்திற்குப் போகவும் உந்தியிருக்கக்கூடும்.

புவீந்திரன் ஒரு நாள் வீட்டிற்கு வந்திருந்தான், உறவினர் ஒருவரும் வந்திருந்தார் ஒரு தந்தைக்கு இயல்பாகவே இருக்கின்ற பிள்ளைப் பாசம் வெளிபபாடு கண்டபோது - வந்தவர் அப்பாவிடம் சொன்னதை, அப்பா மகனிடம் கேட்டார் - '' தம்பி... வெடிபட்டு உனக்கு காலும் ஏலாது......இனி விட்டிட்டு வந்து...... வீட்டோட நிக்கலாம்தானே ......'' அப்பா இழுக்க, மெல்லிய ஒரு சிரிப்போடு விழிகளை உயர்த்தி, ஓர் அரசியல் மேதையைப் போல அவன் விளக்கினான்:

''இயக்கத்திற்குப் போனது, விலத்திக்கொண்டு வாறதுக்கில்லை; நான் போனது நாட்டுக்காகப் போராட.... திரும்பி வீட்டிற்குவாறதுக்கில்லை. இந்தப் போராட்டத்திலை நான் சாகவும் கூடும்: அதைப் பற்றி நான் கவலைப்படவும் இல்லை......'' வந்தவரும் அப்பாவும் மௌனித்துப் போனார்கள்.

கூடித்திரிந்த பழைய நண்பர்கள் நீண்ட காலத்தின்பின் சந்தித்தார்களாம். ஏதேதோவெல்லாம் கதைத்தபின் பிரிகின்ற நேரத்தில், ''நீ இப்ப நொண்டி தானேடா...... இனி உனக்கு ஏன் மச்சான் இயக்கம்...... விட்டிட்டு வாவன்ரா......'' கேலி செய்தார்களாம்.

ஒரு மணித்துளி திகைத்துப் போனவன் - நின்று, திரும்பி, நிதானமாகச் சொன்னானாம் -

'' எனக்கு கால்தான் நொண்டி; என்ர மனம் நொண்டியாகேல்லை. ஒரு உறுப்புத்தான் ஊனமாப் போச்சுதே இல்லாம, உள்ளம் எப்பவும் உறுதியாய்த்தான் இருக்கிது. அங்கங்கள் போறதைப்பற்றி எனக்குக் கவலையில்லையடா...... மனசில உறுதிதான் வேணும். எனக்கு அது நிறைய இருக்கு. நான் சும்மா இருந்து சாகமாட்டன். பெரிய சாதனையொன்றைச் செய்துதான் சாவன்......''

அந்த நண்பர்களுக்கு அப்போது அது புரியவில்லை;சிரித்துக்கொண்டு போனார்கள்; ஆனால், இப்போது விக்கித்து நிற்கின்றார்கள்.

* * *

'' பிரபல கரும்புலி போறார்''- இப்படித்தான் தோழர்கள் அவனுக்குப் பகடி சொல்லுவார்கள்.

ஆனையிறவில் வெடிபட்டு நரம்பறுந்து சூம்பிப் போனதால் - 'பெல்ட்' போட்டுக் கட்டியிருக்கும் இடது காலை இழுத்து இழுத்து, ஒரு புன்சிரிப்போடு புவீந்திரன் போவான்.

அவனை ஒரு 'கரும்புலிப் பைத்தியம்' என்று சொல்லலாம். அவனது நினைவுகள் கனவுகள் எல்லாமே, ஒரு கரும்புலித் தாக்குதலைச் சுற்றித்தான் இருந்தன.

எவருமில்லாத தனியறையொன்றில் -

ஏதாவது ஒரு கடற்கரையோர வரைபடத்தை விரித்து வைத்துவிட்டு, நீண்ட மெல்லிய ஒரு தடியோடு புவீந்திரன் அருகில் நிற்பான். தன்னைத் தளபதியாகவும், அருகில் வீரர்கள் நிற்பதைப் போலவும் உருவகப்படுத்திக் கொண்டு - வரைபடத்தைத் தடியால் தொட்டுக்காட்டி, அவன் காற்றுக்கு விளங்கப்படுத்திக் கொண்டிருப்பான்.

''......டோரா இதாலதான் வரும்......''

''......உங்கட வண்டியள் இந்த மாதிரி வியூகத்தில அதைக் குறுக்கால மறிச்சு அடிக்கும்......''

''......அந்த நேரம் - இந்த விதமாகப் பக்கவாட்டில், உச்ச வேகத்தில வந்து புவீந்திரன் இடிப்பான் .....''

''......டோரா புக்கையாகும்...''

ஒளித்திருந்து பார்த்துக்கொண்டிருக்கும் எங்களுக்கு, அவனைப் பார்க்க சிரிப்புத்தான் வரும்.

புவீந்திரன்!

அவன் ஒரு வித்தியாசமான போராளி மட்டுமல்ல; வித்தியாசமான மனிதனும்கூட .

அவன் அமைதியானவன்; ஆனால் சோம்பேறியல்ல. உற்சாகமானவன்; ஆனால் குளப்படிகாரனல்ல.

அவனோடு வாழக்கிடைத்த நாட்கள் எங்களுக்கு வரப்பிரசாதம்.

அவனுக்குமட்டுமே உரிய சில உயர்ந்த பண்புகள் இருந்தன. இவற்றை அவனிடத்தில் மட்டும்தான் காண முடியும்.

இயல்பாகவே அவனுக்கிருக்கின்ற இரக்க குணம். அடுத்தவர்கள் அவனில் இரக்கப்படும் விதமாக அவனை இயக்குவிக்கும்.

இயலாத காலோடும்கூட சில சமயங்களில் எங்களது நெஞ்சுருகும் விதமாக அவன் செயற்படுவான்.

கிணற்றடியில் உடுப்புத் துவைத்துக் கொண்டிருக்கும் நண்பன், அவசர வேலையொன்றிற்கான அழைப்பின் பேரில், துவைப்பதைப் பாதியில் விட்டு விட்டு அவதிப்பட்டு போனானென்றால் - அவன் திரும்பி வரும்போது அவனது உடுப்புக்கள்

முற்றத்து வெயிலில் உலர்ந்து கொண்டிருக்கும். அப்படிப்பட்டவன்தான் புவீந்திரன்.

முகாமிற்கு யாராவது வெளி ஆட்கள் வந்துவிட்டால் - அவர்களை உபசரிக்க, அன்றைய 'முறை ஆளை'த் தேடித்திரிந்து, பின் மூலையில் போய்ப் பிடித்துவந்து விடுவதற்கிடையில் - வந்தவர்களுக்குத் தேநீர் கொடுத்துவிட்டு, அவன் பேணிகளைக் கழுவிக்கொண்டிருப்பான். அதுதான் புவீந்திரன்.

ஆனையிறவில் வெடிபட்டுக்காயம் மாறி வந்தவனுக்கு, யாழ்.மாவட்ட நிர்வாகச் செயலகத்தில் தட்டச்சுப் பொறிப்பது பணி. அங்கொன்றும், இங்கொன்றுமாக எழுத்துக்களைத் தேடித்தேடிக் குத்திக்கொண்டிருந்தவன் - கொஞ்ச நாட்களில், மற்றவர்கள் மெச்சக்கூடிய அளவுக்கு அதில் தேர்ச்சி பெற்றான்.

அறிக்கைகள், கடிதங்கள், விபரக் கோவைகள், அது இது என்று, நாளாந்தம் அவனுக்கு வேலைகள் குவிந்துபோய்க் கிடக்கும். அப்படி இருக்கும் போதும் - கவிதை, கட்டுரைகளை எழுதிக்கொண்டு வந்து, ''இதையும் ஒருக்கால் ...'' என்று கெஞ்சுகின்ற நண்பர்களிடமும் முகம் சுளிக்காமல் வாங்கி சட்டைப் பைக்குள் மடித்து வைப்பான் காலை மாலை இரவு என இழுபட்டு நள்ளிரவு கடந்து 1. 2 மணிவரை இருந்து கூட தனக்குரிய வேலையை முடிக்கின்ற அந்தப் போராளி, அதன் பிறகும் விழித்திருந்து - நண்பர்களுடையதையும் அடித்துக் கொடுக்கின்ற நண்பன்

புவீந்திரன்!

புலிவீரர்களின் வாழ்வுக்கு நீ ஒரு பாடம்.

உன்னோடு வாழ்ந்த நாட்கள், எக்காலத்திலும் தேயாத பசுமையான நினைவுகள்.

சூம்பிக் கிடக்கும் காலோடும் உன்னைத் தூக்கிக்கொண்டுபோய் கடலில் இறக்கிவிடும் போதெல்லாம் - சிறு பிள்ளை மாதிரித் தத்தளித்து தத்தளித்து கையைக் காலை விசுக்கி விசுக்கி - ஓயாதமுயற்சியோடு அலைகளோடு போராடி நீ நீந்திப் பழகினாய்.



தலைவரோடு புவீந்திரன்

*சோகம் பரவிய முகத்தோடு, உன்னைக் கைதொட்டுத் தடவி, "எந்தக் காலிலையப்பன் வெடி பிடிச்சது:......?'' என்று, அக்கறையோடு தலைவர் விசாரித்தபோது – மெய் சிலிர்த்து நின்று சிரித்தாயாம்.*

''பயிற்சிக் காலம் போதாது. ஒருத்தன்கூட சரியாய் அடிக்க மாட்டான் .....'' என்று சொன்னவர்களிடம் சவால் விட்டு, பயிற்சி முகாமிலிருந்த அத்தனை பேருக்கும் சாள்ஸ் அண்ணன் 'ரச்' தந்த போது - வெடிபட்ட காலை அவரே சரியாய் எடுத்து விட்டு, ரைபிள் பிடித்துச் சொல்லித்தர - நீ மட்டுமே ஒரு 'புல்'லும், ஒரு 'நைனும்' அடித்து, சாள்ஸ் அண்ணனின் பெயரைக் காத்தாய்.

எதுவுமே தெரியாத அப்பாவிக் குழந்தையான உன்னிடம், நல்லதற்ற ஒரு வார்த்தையைச் சொல்லி, ''இன்னாரிட்டைக் கேட்டுப் பார் அர்த்தம் சொல்லுவார்......'' என்று அனுப்பிவிட்டால் - அங்கு போய் நல்ல கிழி வாங்கிக்கொண்டு வந்து, விழுந்து விழுந்து சிரித்துக்கொண்டிருக்கும் எங்களுக்கு முன்னால் அசடு வழிய நிற்பாய்.

கால் இயலாமல் இருந்தும், மெல்ல மெல்லப் படகோட்டப் பழகி - கிளாலிக்களத்தில் எதிரிகளைக் கலைத்து விரட்டும் சண்டைகளில், அலைகளைக் கிழித்துச் செல்லும் எங்களது சண்டைப்படகுகளிற்கு ஓட்டியாய் இருந்தாய்.

இன்னும் ..... இன்னும் ....

இவையெல்லாம், எக்காலமும் ஓயாமல் எங்கள் இதயங்களில் நினைவலைகளாய் மோதும்.

புவீந்திரன்!

சாதனையொன்றைச் செய்துதான் சாவேன் என்றாயா? சாகும்போது நீங்கள் படைத்தது ஒரு சாதனையல்ல; அது சாதனைகளின் ஒரு குவியல்.

'கனன்' எடுத்தது சாதனை. அது இரண்டாக இருந்ததும் ஒரு சாதனை. ஒரே தாக்குதலில் இரண்டு 'பிப்ரி' எடுத்தது இன்னொரு சாதனை. டோரா ஒன்றை முழுமையாக நொருக்கியது அடுத்த சாதனை. ஒரு கடற்தாக்குதலில் அதிக படையினர் கொல்லப்பட்டது வேறொரு சாதனை.

''ஆசிரில ட்ரெயினிங் தரேக்கை நாங்கள் ஒரு டோரா அடிக்க வேணும் எண்டு சாள்ஸ் அண்ணன் சொல்லுறவர்......'' என்று அடிக்கடி கூறும் நீ, ''இப்ப நாங்கள் அடிக்கப் போறம். ஆனால்,அதைப் பார்க்கிறதுக்கு அவர்தான் இல்லை'' என்று கவலைப்படுவாய்.

அந்தத் தாக்குதல் திட்டம் உருவாக்கப்பட்டது.

கட்டைக்காட்டிலிருந்து- பலாலிக்கு ரோந்து செல்லும் டோராவை, பருத்தித்துறைக்கு மேலே இடைமறித்து மூழ்டிக்க வேண்டும். கட்டைக்காட்டிலிருந்து 18 மைல் தூரத்திலும், காங்கேசன் துறையிலிருந்து 16 மைல் தூரத்திலும் அந்தத் தாக்குதல் மையம் இருந்தது.

மணியரசனும் நீயும் தலைவரிடம் போனீர்கள்.

உங்கள் வாழ்வின் உச்ச உயர் நாள் அதுவாகத்தான் இருந்திருக்கும்.

உள்ளப் பூரிப்பின் சிகரங்களைத் தொட்டிருக்கக் கூடிய அந்த நாளில், உங்கள் மனவுணர்வுகள் எப்படியிருந்திருக்கும் என்பதை, வார்த்தைகளில் வடித்தெடுக்க முடியாது

சோகம் பரவிய முகத்தோடு, உன்னைக் கைதொட்டுத் தடவி, ''எந்தக் காலிலையப்பன் வெடி பிடிச்சது?......'' என்று, அக்கறையோடு தலைவர் விசாரித்த போது - மெய் சிலிர்த்து நின்று சிரித்தாயாம்.

எல்லாமே தயார்.

சக்கைக் வண்டி; சண்டைப் படகுகள்; தாக்குதற் கருவிகள்; தாக்கும் வீரர்கள்; மணியரசன், நீ ..... எல்லாமே.

ஏறக்குறைய பதினைந்து நாட்கள். அவனுக்காக கடல் மடியில் நீங்கள் காத்திருந்தீர்கள்.

நள்ளிரவிலேயே நிலைக்குப் போய்விடவேண்டும். இருளை ஊடறுத்து உங்கள் விழிகள் பகைவனைத் தேடிக்கொண்டிருக்கும்.

மறுநாள் மதியமோ, மாலை வரையோ அந்தத் தேடல் நீடிக்கும், எதிரி வரமாட்டான்; ஒவ்வொரு நாளும் ஏமாற்றத்தோடு திரும்பி வருவீர்கள்.

உற்சாகம் குன்றாமல், உறுதி குலையாமல் நீங்கள் மீண்டும் மீண்டும் போனீர்கள்.

29- 08- 93. நீங்கள் எதிர்பார்த்துக்கொண்டிருந்தவன் கடலில் வந்தான்.

பொங்கியெழும் எங்கள் கடலில் பகைவன் உலா வரவா?

காத்திருந்த வேங்கைகளின் ஆவேசமான பாய்ச்சல்.

தனியறையில் - வரைபடத்தை விரித்துவைத்து, நீ காற்றுக்கு விளங்கப்படுத்துகிற அதே தாக்குதல் திட்டம் - எங்கள் கண்ணெதிரே கடலில் நடந்து முடிந்தது.

அப்போது நாங்கள் சிரித்தோம். இப்போது...

இரண்டு 'கனன் பீரங்கி'களையும். 2 'பிப்ரி கலிபர்'களையும் மூழ்கிக்கொண்டிருந்த 'டோரா' விலிருந்து தோழர்கள் எடுத்துக் கொண்டு வந்தார்கள்.

புவீந்திரன் வரமாட்டான்... !

மணியரசனும் வரமாட்டான் ..!

* * *

மணியரசன்!

'' பதினைந்தும் நிரம்பாத பாலக வயதில், தாயகத்துக்காய் தனையீந்த கரும்புலி; என் கருவில் விளைந்த பிள்ளை '' என்று, தமிழீழத் தாயை தலைநிமிர்ந்து சொல்லவைத்த அடலேறு அவன்.

அந்தத் துடியாட்டமும், துடுக்கான பேச்சுக்களும் எங்களது நெஞ்சுக் கூட்டுக்குள் அவனது நினைவுகளைப் புதைத்துவிட்டுப் போய்விட்டன.

இந்தச் சின்ன வயதிலும் - பிறைச்சந்திரன் போல ஒரு மெல்லிய மொட்டை, அகவைக்கு ஏற்ற அளவில் குழந்தை வளர்ச்சி, குறும்புச் சிரிப்போடு ஓர் உருண்டை முகம். நிமிர்ந்த - லாவகமான - திடகாத்திரமான உடல்வாகு. எங்கள் கண்ணெல்லாம் அந்த வண்ணக்கோலம்.

மணியரசன் குறுகுறுத்தவன். பஜரோவில் வருகின்றவர் வீட்டிற்குள்போய் அலுவல் முடித்துவிட்டு, போன வேகத்திலேயே திரும்பிவந்தால்கூட, பஜரோ அடுத்த பக்கமாகத் திரும்பி நிற்கும். '' ஆரடா தம்பி பஜரோவை திருப்பி விட்டது? ''; வந்தவர் தேடினால், ஒதுக்குப் புறமாக மணியரசன் தலையைச் சொறிந்து கொண்டு நிற்பான். அது மோட்டார் சைக்கிளானால், ஒரு ''8'' அடித்துவிட்டுத் திரும்பி நிற்கும். உள்ளே போனவர் வெளியில் வந்தால் - ஏதோ முக்கிய வேலையில் மூழ்கியிருப்பவனைப் போல, தூரத்திலிருந்து ஓரக்கண்ணால் பார்ப்பான். முகாமிற்குப் புதிதாகக் கொண்டுவரப்படும் ஒரு பொருள், துண்டுகளாகப் பிரித்து மேசையில் வைக்கப்பட்டிருக்கும். யாருடைய வேலை இது என்று யாருமே கேட்பதில்லை.

மணியரசன் குறுகுறுத்தவன் தான்: குளப்படிகாரன்தான். ஆனால் எவருடைய கோபத்திற்கும் ஆளாகின்றவனல்ல.

ஒருதடவை அவனோடு பழகியவர்களுக்கு, இன்னொரு தடவை அவனை நினைவுபடுத்தத் தேவையில்லை. எல்லோருடைய நினைவுகளிலும் நிலைத்துவிடும் வசீகரம் அவனிடமிருந்தது. மிகக் குறுகியகாலத் தொடர்புசாதன வேலையில் - அவன் சேர்த்து வைத்திருந்த முகம் தெரியாத நண்பர்கள் பலர். எந்த நிலையத்தில் தகவல் பரிவர்த்தனை வேலை செய்பவராக இருந்தாலும், அவனோடு கதைக்காமல் அவர்கள் அலைவரிசையை மூடிக்கொண்ட நாட்கள் மிகக் குறைவு. மணியரசா! உனது அன்பின் வீச்சுத் தூரம், தமிழீழத்தின் எல்லைகளைத் தொட்டிருந்ததடா!

மணியரசனுக்கு ஒரு பொழுதுபோக்கு, மற்றவர்களைக் கிண்டல் செய்துகொண்டிருப்பது. அவனிருக்குமிடத்தில் வாய்திறக்க அநேகமானவர்களுக்குப் பயம். ட்ரக் ஓடும் ஐம்பது வயது ஐயாவிலிருந்து, புதிதாக இயக்கத்திற்கு வரும் சின்னப்பையன்வரை - வயது வேறுபாடின்றி - எல்லோருமே அவனுடைய அறுவைக்கு இலக்கு. ஆனாலும் மணியரசா! '' இயக்கம் பொமர் வாங்கினா, அதை இறக்க எங்களிட்டை ஒரு 'றண்வே' இருக்கு '' என்று, மயிரில்லாத உன் முன்பக்கத் தலை அறுவைக்கு உள்ளாகும்போது கூட, மேல் மயிரைத் தட்டிவிட்டு 'உருமறைப்புச்' செய்து கொண்டு, புன்னகையோடு அந்தக் கிண்டலை



கரும்புலி கப்டன் மணியரசன்

ஏற்றுக்கொள்ளும் உனது நட்பின் பண்பு, உயர்ந்தது.

* * *

ஊரிலும், பள்ளிக்கூடத்திலும் கனியூட் என்று செல்லமாக அழைக்கப்பட்ட வேதநாயகம் ராஜரூபன்தான் எங்கள் மணியரசன்.

குடும்பத்தில் கடைசித் தங்கச்சிக்கு நேரே மூத்த இவன், 7ஆவது பிள்ளை.

மணற்காடு றோமன் கத்தோலிக்க மகாவித்தியாலயத்தில் படிக்கும்போது, அதன் உதைபந்தாட்டக் குழுவொன்றில் சிறந்த ஒரு விளையாட்டு வீரனாக இருந்ததுடன், அவன் படிப்பிலும் கெட்டிக்காரனாம்.

அப்பா தொழிலுக்குப் போகும் போது, இடைக்கிடை அவரோடு கடலுக்குப் போகிறவன், திறமையான நீச்சல்காரனாகவும் ஆகியிருந்தான்.

1991இன் நடுப்பகுதியில் இவன் இயக்கத்திற்கு வரும்போது 8ஆம் வகுப்போடு படிப்பை இடையில் நிறுத்திவிட்டுத்தான் வந்தான்.

அவன், எல்லாத் திறமைகளும் ஒருங்கிணைந்திருந்த ஒரு போராளி. இந்தத் தேசம் அவனிடமிருந்து பெற்றுக்கொள்ள நிறையவே இருந்தது; அவற்றை வழங்கும் ஆற்றலையும் அவன் கொண்டிருந்தான். ஆனால், ஒரு கரும்புலித் தாக்குதல்தான் அவனுடைய பிரதான குறியாக இருந்தது. கடைசியிலும் அதைத்தான் அவன் செய்தான்.

கடற்புலிகளின் 1ஆவது பயிற்சி வகுப்பில் பயிற்சி எடுக்கும்போதே - பயிற்சிகளில் ஆர்வம் நிறைந்தவனாகவும், பரீட்சைகளில் அதிக புள்ளிகள் பெறுபவனாகவும் திகழ்ந்தான்; சிறந்த ஒரு விடுதலை வீரனாக முளைவிட்டான்.

அவனுடைய தெளிவான பேச்சுவன்மையும், விடயங்களைக் கிரகித்துக்கொள்ளும் வேகமும்தான் அவனை தகவல் பரிவர்த்தனை வேலைக்கு ஏற்றவனாக இனம் காட்டின. தகவல் தொடர்புச் சாதனம் கற்பிக்கும் பாடத்திட்டமானது, பொதுவாக, 'இவ்வளவு காலப்பயிற்சி' என வரையறுக்கப்பட்டது. ஆனால், மணியரசன் அதனைக் கற்றுக்கொண்டுவிட்ட நாட்களை விரல் மடிப்பிற்குள் அடக்கிவிடலாம்.

இரண்டே வருடகால அவனுடைய போராட்ட வாழ்வின் மிகப் பெரும்பாலான நாட்கள்,தொடர்பு சாதனம் இயக்கும் வேலையிலேயே

(15 ஆம் பக்கம் பார்க்க)

# சிறீலங்கா கடற்படையின் பலம்

**1990** யூன் 10ஆம் திகதி தொடங்கிய போருடன் சிறீலங்கா அரசு தனது கடற்படையின் ஆட்பலத்தை, அப்போதிருந்ததைவிட ஏறக்குறைய இரண்டு மடங்காக அதிகரித்தது ஆட்தொகையில் மட்டுமல்ல அதிவேகப் படகுகள், பீரங்கிப் படகுகள், பாரிய ரோந்துக் கப்பல்கள் என்று கடற்படையின் ஆயுத பலத்தையும் அதிகரித்தது.

1950 ஆம் ஆண்டு சுமார் இருநூறு மாலுமிகளுடன் இருந்த சிங்களக் கடற்படையின் ஆட்தொகை 1993 இல், பத்தாயிரத்து நானூறாக (10,400) அதிகரித்துவிட்டது (வரைபடத்தைப் பார்க்கவும்).

15.11.1992 அன்று கொழும்பில் நடந்த ஒரு மனிதக்குண்டுத் தாக்குதலில் கொல்லப்பட்ட, அப்போதைய கடற்படைத் தளபதி அட்மிரல் கிளான்சி பெர்னாண்டோவுக்குப் பதிலாக, சிறீலங்கா கடற்படைத் தளபதியாக வைஸ் அட்மிரல் D.A.M.R. சமரசேகரா பதவியேற்றுள்ளார்.

கடற்படைத் தளபதியின் தலைமையின் கீழ் சிங்களக் கடற்படை நான்கு நிருவாகப் பிரிவுகளாக இயங்கிவருகின்றது.

1. பிரதம அதிகாரி (Chief Of Staff).
2. கிழக்குப் பிராந்திய கடற்பகுதி (Com. East).
3. வடபிராந்திய கடற்பகுதி (Com. North).
4. கடல் நடவடிக்கைகளின் இயக்குனர் சபை (Dire. Of Ops).

இவை ஒவ்வொன்றுக்கும் 'கொமடோர்' தரத்திலான அதிகாரிகள் பொறுப்பாக உள்ளனர். ('பிரிகேடியர்' என்ற தரைப்படைப் பதவிநிலைக்கு இது ஒப்பானது).


பிரதம அதிகாரி என்ற பதவிநிலையில் கொமடோர் D.K. தசநாயக்க,

கிழக்குப் பிராந்திய கடற்பகுதிப் பொறுப்பதிகாரியாக கொமடோர் D.W. சந்தசிறி,

வடபிராந்திய கடற்பகுதி அதிகாரியாக கொமடோர் J.T.G. சுந்தரம்,

கடல் நடவடிக்கையின் இயக்குனர் சபைப் பொறுப்பதிகாரியாக கொமடோர் H.R. அமரவீர ஆகியோர் பதவி வகிக்கின்றனர்.

சிங்களக் கடற்படையின் கப்பற்பலத்தை பின்வரும் வகைகளுக்குள் அடக்கலாம்





### 1. கட்டளையிடுவதும் துணையுமான கப்பல் (Command and Support ship)

இந்தவகைக் கப்பல்கள் கடற்படையிடம் மூன்று உண்டு. அபிதா, எடித்தாரா, விக்கிரம என்ற பெயருடன் களத்தில் உள்ளன. இவை மூன்றும் வடபிராந்தியகடற்பகுதியிலேயே சேவையில் உள்ளன. இவற்றின் பணி சதா கடலைக் கண்காணித்து, புலிகளின் படகுகள் தென்படுகின்றனவா என்று பார்ப்பதும், அவ்விதம் தென்பட்டால் அந்தத்தகவலை பீரங்கிப் படகுகளுக்கு அல்லது விசைப்படகுகளுக்கு அறிவித்து, குறித்த படகுகளை மூழ்கடிப்பதுதான். அத்துடன் ஏனைய கடற்படைக் கப்பல்களுக்கு நீர் - எரிபொருள் என்பவற்றை வழங்குவதுடன், வழிகாட்டியாகவும் செயற்படும். 150/- 175 அடி நீளமும் 40 அடி அகலமும் கொண்ட இக்கப்பல்கள், மணித்தியாலத்திற்கு 9 - 12 கடல்மைல் வேகத்தில் செல்லக்கூடியவை

இந்தவகைக் கப்பல் ஒன்றில் 60 - 65 மாலுமிகள் பணியாற்றுவர். தேவை ஏற்பட்டால் 1000 சிப்பாய்களை ஏற்றிச்செல்லும் சக்தி இதற்குண்டு. இக்கப்பல்கள், 'கப்டன்' தரத்திலான அதிகாரிகளால் வழிநடாத்தப்படும். (இந்தப் பதவியை 'கேணல்' என்ற தரத்திலான தரைப்படைப் பதவிக்கு இணையானதாகக் கொள்ளலாம்).

இந்த மூன்று கப்பல்களில் 'எடித்தாரா' கப்பல்மீது 10 07.1990 அன்றும், 'அபிதா' கப்பல்மீது 4.5.1991 அன்றும் கரும்புலித் தாக்குதல் நிகழ்த்தப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. சேதமடைந்த இக்கப்பல்கள் பின்னர் கொழும்பு 'டொக்யாட்' நிறுவனத்தினால் திருத்தியமைக்கப்பட்டு, இப்போது மீண்டும் வடபிராந்தியக் கடலில் சேவைக்கு விடப்பட்டுள்ளன.

இக்கப்பல்களில் பொருத்தப்பட்டுள்ள 'செலஸ்மார்' வகை ராடர்கள், 85 மைல் தொலைவீச்சுக் கொண்டவை. இந்த ராடர்மூலம் ஒரு படகு அல்லது கப்பல் எந்தத் திசையில் சென்றுகொண்டிருக்கின்றது.




சிறீலங்கா கடற்படையிடமுள்ள ''சங்காய் – 2'' வகையைச் சேர்ந்த ஒரு மோட்டார் பீரங்கிப் படகு. 'வீரயா–சூரயா' என பொதுவாக மக்களால் பேசப்படும் பீரங்கிப்படகு இந்த வகையைச் சேர்ந்தது. ஆனால் வீரயா சூரயா என்பது ஒரு பீரங்கிப்படகின் பெயரல்ல; அது இருவேறு பெயர்களைக்கொண்ட இருவேறு பீரங்கிப்படகுகளாகும்.

அதில் என்னவகையான ஆயுதங்கள் பொருத்தப்பட்டிருக்கின்றன, அப்படகினது அல்லது கப்பலினது வேகம் என்ன, குறித்த படகு அல்லது கப்பல் இந்தக் கடற்படையின் கப்பலிலிருந்து எவ்வளவு தூரத்தில் உள்ளது என்பதையும் அறிந்துகொள்ள, அந்த ராடர்கள் உ:ரவும். அத்துடன் 14.5 மி.மீ. ரக விமான எதிர்ப்புத் துப்பாக்கிகள் மூன்று அல்லது 25 மி.மீ. ரக பீரங்கி ஒன்றும், 14 8 மி.மீ. ரக துப்பாக்கி இரண்டும் பொருத்தப்பட்டிருக்கும.

## 2. பாரிய ரோந்துப் படகுகள் (Large Patrol Craft)

இந்தவகைக் கப்பல்கள் கடற்படையிடம் இரண்டு உண்டு. ஜெயசேகர, சாகரவர்த்தன என்ற பெயர்களுடன் களத்தில் உள்ளன. ஏறக்குறைய 132 அடி நீளமும் 35 அடி அகலமும் கொண்ட இவை, 25 கடல்மைல் வேகத்தில் செல்லக்கூடியவை. இதில் முன்னுக்கும் பின்னுக்கும் ஒவ்வொரு 25 மி. மீ. ரக பீரங்கிகள் பொருத்தப்பட்டிருக்கும். இவை தவிர இயந்திரத் துப்பாக்கிகளும் உண்டு. இந்த ரோந்துப் படகில் 35 — 40 மாலுமிகள் பணியாற்றுவர் இதனுடைய பணி ஆழக்கடலில் ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபடுவதும் - வேவு பார்த்தலும் - கடற்சண்டையில் பங்குபற்றுவதும் ஆகும். இந்த வகைப் படகுகள் 'கொமாண்டர்' தரத்திலான அதிகாரிகளால் வழிந' ாத்தப்படும். (தரைப்படையில் இப்பதவியை லெப். கேணல் என்ற தரத்திற்கு இணையானதாகக் கொள்ளலாம்).



*சிங்களக் கடற்படையின் அணிவகுப்பு மரியாதையை ஏற்கும் - மனிதக் குண்டில் கொல்லப்பட்ட - அதன் முன்னாள் தளபதி அட்மிரல் கிளான்சி பெர்னாண்டோ.*

## 3. மோட்டார் பீரங்கிப் படகுகள் (Motor Gun Boats)

'சங்காய் வகை - 2'

வீரயா, சூரயா என்று மக்கள் அறிந்துவைத்திருக்கும் பீரங்கிப் படகுகள் இந்த வகையைச் சாரும். இந்தவகைப் படகுகள் ஒன்பது கடற்படையிடம் உண்டு.

('சங்காய் வகை - 2' இல் ஐந்து படகுகளும், 'சங்காய் வகை - 3' இல் நான்கு படகுகளும் உண்டு.)


சங்காய் வகை - 2 ஐச் சேர்ந்தவை சூரயா, வீரயா, றணகாமி, தக்சயா, பாலவந்த என்று பெயரிடப்பட்டுள்ளன. இந்த ஐந்து பீரங்கிப் படகுகளின் ஆங்கில முதல் எழுத்துக்களை எடுத்தால் (S. W. R. D. B.) அவை பண்டாரநாயக்காவை ஞாபகப்படுத்தும் வகையில் சிங்களக் கடற்படையால் பெயரிடப்பட்டுள்ளமை தெரியும்.

இந்தப் பீரங்கிப் படகுகள் 70 80 அடி நீளமும் 30 - 35 அடி அகலமும் கொண்டவை. இவை மணிக்கு 20 கடல்மைல் வேகத்தில் செல்லக்கூடியவை இதில் 37 மி. மீ பீரங்கிகள் இரண்டும், 25 மி. மீ ரக பீரங்கிகள் இரண்டும் பொருத்தப்பட்டிருக்கும் இப் பீரங்கிப் படகுகளில் 30 - 35 மாலுமிகள் கடமையாற்றுவர் இதன்பணி பாரிய கப்பல்களுக்குப் பாதுகாப்பளிப்பதும், கடற்சண்டையில் ஈடுபடுவதும், தரைப்படைக்கு ஆதரவாக கடலிலிருந்து குண்டுகளை வீசுவதும், கடலைக் கண்காணிப்பதும் ஆகும். இந்தப் பீரங்கிப் படகுகள் 'லெப். கொமாண்டர்' தரத்திலான அதிகாரிகளால் வழிநடாத்தப்படும். (இப்பதவியை 'மேஜர்' என்ற தரைப்படைப் பதவிநிலைக்கு இணையானதாகக்கொள்ளலாம்).

## 4. தரையிறக்கும் கலங்கள் (Landing Craft)

இந்தவகைக் கலங்கள் நான்கு சிங்களக் கடற்படையிடம் உண்டு. கந்துல, ரணகய, பப்பத்த, பந்துல என்ற பெயர்கள் இவற்றிற்குச் சூட்டப்பட்டுள்ளன. 100 அடி நீளமும் 40 அடி அகலமும் கொண்ட இக்கலங்கள், மணிக்கு 7 கடல்மைல் வேகத்தில் செல்லக் கூடியது இதன் பணி கடலிலிருந்து துருப்புக்களைத் தரையிறக்குவதுதான் கடற்கரை வரை வந்து துருப்புக்களை இறக்கக்கூடிய வசதி இகற்குண்டு. வெற்றிலைக்கேணியில் இவ்வகைக் கலங்கள்தான், கடலிலிருந்து படையினரைத் தரைக்குக் கொண்டுவர, சிங்களப் படைக்குப் பெரிதும் உதவின. ஒரே தடவையில் சுமார் 600 படை வீரர்களை இது கொண்டுவந்து இறக்கும். இந்தக் கலங்களின் கட்டளை அதிகாரிகளாக லெப். கொமாண்டர் தரத்திலான அதிகாரிகள் பணியாற்றுவர். இக்கலங்களில் 20 மி மீ. ஓவர்லிக்கன் ரக பீரங்கிகள் இரண்டும், 12. 7 மி. மீ ரக விமான எதிர்ப்புத் துப்பாக்கிகள் மூன்றும் மற்றும் இயந்திரத் துப்பாக்கிகளும் இருக்கும்.

கடல்வழி தரையிறக்க நடவடிக்கைகளில் இக்கலத்தினது பங்கு மிக முக்கியமானதாக இருக்கும்.



*ஒரே தடவையில் சுமார் 600 படைவீரர்களைக் கொண்டுசென்று தரையிறக்கக்கூடிய இந்தக்கலம், கடற்கரை வந்து (1 அடி தண்ணீரில்) படையினரை இறக்கிவிடக்கூடியது. இவ்வகைக் கலங்கள் நான்கு தற்போது சிங்களக் கடற்படையிடம் உண்டு.*

## 5. அதிவேக ரோந்துப் படகுகள் (Fast Patrol Craft)

இந்தவகைப் படகுகளில் பதினைந்து சிங்களக் கடற்படையிடம் உண்டு. 'டோரா' வகைப் படகுகள் பத்தும், 'டாபுர' வகைப் படகுகள் இரண்டும், தென்கொரியாவில் செய்யப்பட்ட படகுகள் (பெயர் அறியமுடியவில்லை) மூன்றும அடங்குகின்றன இப்படகுகளின் பணி, சந்தேகத்துக்கிடமான கப்பல்களை அல்லது படகுகளைத் துரத்தி அடிப்பதும், இரவு நேரங்களில் ரோந்தில் ஈடுபடுவதும், வேவு வேலைகளில் ஈடுபடுவதும், பாரிய கப்பல்களுக்குப் பாதுகாப்பளிப்பதும் ஆகும். 41 அடி நீளமும் 15 அடி அகலமும் கொண்ட இந்த வேகப் படகுகள், மணிககு 35 - 40 கடல்மைல வேகத்தில் ஓடக்கூடியவை. இதில் 20 மி மீ. ஓவர்லிக்கன் ரக பீரங்கிகள் இரண்டும், 12. 7 மி. மீ ரக விமான எதிர்ப்புத் துப்பாக்கிகளும், மேலும் இயந்திரத் துப்பாக்கிகளும் உள்ளன. இப்படகில் 9 - 12 மாலுமிகள் பணியாற்றுவர். 'லெப்டினன்ட்' தரத்திலான அதிகாரி பொறுப்பாகச் செயற்படுவார். (தரைப்படையில் இப்பதவியை 'கப்டன்' தரத்திற்கு இணையானதாகச் சொல்லலாம).

## 6. கரையோர ரோந்துப் படகுகள் (Inshore Patrol Craft)

இந்தவகைப் படகுகள் இருபத்தெட்டு சிங்களக் கடற்படையிடம் உண்டு. இதில நீருந்து விசைப் படகுகளும் (Water Jet) அடங்கும். இந்தவகைப் படகுகளை சிறீலங்கா அரசு தானே தயாரித்துக் கொள்கின்றது. ஆழங்குறைந்த கடற்பகுதிகளில் கண்காணிப்புச் செய்ய, இவ்வகைப் படகுகள் பயன்படுத்தப்படும். 50 கலிபர் துப்பாக்கி ஒன்று பொருத்தப்பட்ட இப்படகுகளில், சாதாரண ரக சுரிகுழல் துப்பாக்கிகளும் பயன்படுத்தப்படும். கிளாலி கடல் நீரேரியில், இவ்வகைப் படகுகளையே சிங்களக் கடற்படை பயன்படுத்துகின்றது.

தற்போது 'டெக்கா' ரக ராடர் ஒன்றும் இதில் பொருத்தப்பட்டுள்ளது.

மேலே கூறப்பட்டுள்ள வகைப் படகுகள், கப்பல்கள் கடற்புலிகளின் வளர்ச்சிக்கெதிராகப் போரிட

(15 ஆம் பக்கம் பார்க்க)

# கடற்புலிகளின் வளர்ச்சியும் போரில் திருப்புமுனைகளும்

சிங்கள தேசத்து படைத்துறையின் முதுகெலும்பாக இன்று விளங்குவது, அதன் கடலாதிக்கம்தான். வடதமிழீழத்தில் கடற் கரையோரமாக அமைக்கப்பட்டிருக்கும் படைமுகாம்களுக்கான சகல விதமான விநியோகங்களையும், ஆபத்துக்காலகட்டங்களில் அவ சர உதவிகளையும் கடற்படையே வழங்கி, படைமுகாம்களைப் பாது காத்து, பராமரித்து வருகின்றது.

சிங்களப் படைத்துறைக்கும் வடதமிழீழக் கரையோரமுள்ள படைமுகாம்களுக்குமிடையே தொப்புள்கொடிபோல நின்று செயற் படும் சிங்களக் கடற்படையின் பலம் சிதைக்கப்பட்டால், எமது விடுதலைப் போராட்டம் பாரிய திருப்புமுனை ஒன்றைச் சந்திக்கும். ஈழத்தமிழினம் ஆவலுடன் எதிர்பார்க்கும் இத்திருப்புமுனைக் குரிய காலம் கனிந்துவருவதைத்தான், கடந்த மாதம் வெற்றிகர மாக நடந்து முடிந்த, கிளாலிக் கடல்நீரேரித் தாக்குதலும் பருத் தித்துறைப் பெருங்கடற் தாக்குதலும் கோடிகாட்டியுள்ளன.

கடற்புலிகளின் வளர்ச்சியால் ஏற்பட்டுவரும் இத்திருப்பு முனை, எமது விடுதலைப்போரின் பரிமாணத்தை - தமிழினத் திற்கு சார்பான முறையில் - மாற்றியமைக்கும் என்பது திண்ணம்.

எமது விடுதலைப்போரில் ஒரு முக்கிய பாத்திரத்தை வகித் துக்கொண்டிருக்கும் கடற்புலிகள் அமைப்பைக் கட்டி வளர்ப் பதில், தலைவர் பிரபாகரன் அவர்கள் பேரார்வம் காட்டிவருகின் றார்.

சிங்களக் கடற்படையுடன் ஒப்பிடும்போது, பலமும் - வளமும் குறைந்த நிலையிலும் எதிரியை வெற்றிகொள்வதற்குரிய தந்தி ரோபாயங்களையும் - தாக்குதல் திட்டங்களையும் வரைந்து கடற் புலிகளின் பலத்தைப் பெருக்க, தலைவர் தீவிர கவனம் செலுத்து கின்றார்.

ஆனையிறவுச் சமரையடுத்து 1991 ஆம் ஆண்டின் பிற்பகுதியில், விடுதலைப் புலிகளின் கடற்புலிகள் என்ற பெயர்மாற்றத்துடன் வேகங் கொண்ட கடற்புலிகளின் செயற் பாடுகள்,இந்தஇரண்டு வருடத்தில், போரின் போக்கையே தீர்மானிக் கும் அளவுக்கு ஒரு நிர்ணய சக்தி யாக வளர்ந்துவிட்டது.

அதுவும் கடந்த மாதம் கிளா லிக் கடலேரியிலும், பருத்தித் துறைப் பெருங் கடலிலும் - நான்கு நாள் இடைவெளிக்குள் - கடற்புலி கள் மேற்கொண்ட இரண்டு தாக்கு தல்களின் வெற்றிகளும, அத்தாக்கு தல்களின் தன்மைகளும், கடற்புலிக ளின் பலத்தை எடுத்துககாட்டி யுள்ளன.

இலங்கைத் தீவில் இரண்டு இரா ணுவங்கள் என்ற கருத்துடன், இரண்டு கடற்படைகள் என்றும் மதிப்பிடத்தூண்டும் அளவுக்கு, கடற்புலிகள் ஒரு சக்தியாக உரு வாகிவிட்டனர்.

கடற்புலிகளின் இந்த வளர்ச்சி, சிங்களப் பேரினவாதிகளைக் கலக்க மடையச் செய்துவிட்டது. அவர் களது கலக்கத்திறகு காரணமுண்டு.

ஈழப்போர் - 2 சிங்கள அரசுக்குப் போதித்த பாடங்களுள் ஒன்று, கடல்வழித் தொடர்பு இல்லாத படைமுகாம்கள் (எல்லைப்புறங் கள் தவிர) நிலைத்திருக்க முடி யாது என்பதுதான் (கொக்காவில், மாங்குளம், ஆனையிறவு அதறகு உதாரணங்கள்).

ஆனால், இன்று அந்தக் கடல் வழித் தொடர்புக்கு ஆதாரமாக இருந்துவரும் சிங்களக் கடற் படைககே, சோதனைக்காலம் தொடங்கிவிட்டது.

ஆனையிறவுச் சமரின் பின், குடா நாட்டுடனான சகல தரைப்பாதை களையும் துண்டித்து, யாழ். குடா நாடு மீது ஒரு முழுமையான இரா ணுவ முற்றுகையை இட்டு, பொரு ளாதாரத் தடையைப் பூரணமாக அமுல்படுத்தி - பொதுமக்களைப் பட்டினிபோட்டு, அவர்களின் உறு திப்பாட்டை உடைப்பதுடன் புலி கள் இயக்கத்தையும் அழித்து, விடு தலைப் போராட்டத்தையும் ஒடுக்க அரசு பெருமுயற்சி செய்தது. இத னைக் கண்ட குடாநாட்டு மக்களில் ஒரு பகுதியினர் இடிந்துபோய் பீதியில் இருந்தனர்.

இத்தகைய ரோந்துத் தொடர் ஒன்றை29-12-1991 அன்றுதாக்கிய கடற்புலிகள் 09 கடற்படையின ரைக் கொன்று, அவர்களது ஆயு தங்களையும் கைப்பற்றினர். இவ் வாறான தாக்குதல்கள் கடல் நீரேரியில் தொடர்ந்தன.

கடற் சண்டைகளைப் பொறுத் தளவில், கிளாலிக் கடல்நீரேரியைப் போன்று ஆழங்குறைந்த கடல் களில் நடைபெறும் படகுச் சண் டைகள் ஒரு பரிமாணத்திலும், ஆழக்கடலில் நடைபெறும் கடற்

புலிகள் இயக்கத்தின் இறுதிக் காலம் நெருங்கிவிட்டது எனப் பேரினவாதிகள் அகமகிழ்ந்திருந்த னர். அப்பொழுதுதான், கடற்புலி கள் கடலிலே காவியம் படைக்கத் தொடங்கினர். கிளாலிக் கடல்நீரேரி பிரதான பொருது களமாகவும் போராட்டத்தின் தலைவிதியையே தீர்மானிக்கக்கூடிய வரலாற்று முக் கியத்துவம் வாய்ந்த இடமாகவும் மாறத் தொடங்கியது.


படையினரின் பயமுறுத்தல்களை யும் அரசின் தடைச்சட்டங்களையும் புறந்தள்ளிவிட்டு, கடல்நீரேரி ஊடாக மக்கள் பயணம்போகத் தொடங்கியபோது, அதனைத் தடுக்கச்சிங்களக்கடற்படைசெயலில் இறங்கியது. கடல்நீரேரியைக்கட்டுப் படுத்துவதற்கென சங்குப்பிட்டி இறங்குதுறைக்கருகில்உள்ள நாக தேவன் துறையில் ,(ஞாவிமடம்)ஒரு கடற்படைத் தளத்தை அது அமைத்துக்கொண்டது. '50கலிபர்' துப்பாக்கியுடன் 'ராடர்' கருவிகள் பொருத்தப்பட்ட நீருந்து விசைப் படகுகளைக் கடற்படையினர்கடல் ரோந்திற்குப் பயன்படுத்தினர். உல்லாசப் பயணம் போவதுபோல, நாகதேவன் துறையிலிருந்து ஆனை யிறவு இராணுவத்தளத்திற்கு,கடல் நீரேரி வழியாக அடிக்கடி கடற் படையினர் ரோந்துசென்றனர்.

இவ்விதம் பல விசைப்படகு கள் சேர்ந்து கடல்நீரேரியில் ரோந்து போகத் தொடங்கின.

அதன்பின் ஆனையிறவுக்கான கடல்ரோந்து தடைப்பட்டது.

அதன்பின், இரவு நேரங்களில் மக்களின் படகுப்பயணத்திற்கு பாதுகாப்பளித்துவந்த கடற்புலி களின் விசைப்படகுகளுக்கும் சிங் களக்கடற்படையின் விசைப்படகு களுக்கும் இடையே, நேரடிக் கடற் சண்டைகள் நடைபெறத் தொடங் கின. இந்தச் சண்டைகளில் கடற் புலி வீரர்கள் காட்டிய வீரமும் அபாரத்துணிச்சலும் சிங்களக் கடற் படையைக் கதிகலங்கச் செய்தன. இறுதியில், 26-08-93 அன்றுநடந்த கடற்சண்டையும், கரும்புலித் தாக் குதலும் கடல்நீரேரியில் சிங்களக் கடற்படையைத் தூரவிலகியிருக்கச் செய்துவிட்டது.

இவ்விதம் கிளாலிக் கடல்நீரேரி ஊடாக ஒரு போக்குவரத்துப் பாதையைத் திறந்த கடற்புலி கள், சிங்களக் கடற்படையுடன் இடைவிடாது மோதி, வீரச்சாத னைகள் பல புரிந்து, இறுதியில் கிளாலிக் கடல்நீரேரியில் மேலாதிக் கம் பெற்றுவிட்டனர். இந்தவகை யில் கிளாலிக் கடல்நீரேரியில் கடற் புலிகள் நிகழ்த்திய கடற்சண்டை கள், எமது போராட்ட வரலாற் றில் முக்கிய இடத்தைப் பெற் றுக்கொள்ளும்.




பருத்தித்துறையில் கரும்புலித் தாக்குதலில் மூழ்கிய 'டோரா' பீரங்கிப் படகிலிருந்து கைப்பற்றிய ஆயுதங்களைத் தலைவர் பார்வையிடுகின்றார்.

*பலமும் - வளமும் குறைந்த நிலையிலும், எதிரியை வெற்றிகொள்வதற்குரிய தந்திரோ பாயங்களையும் - தாக்குதல்திட்டங்களையும் வரைந்து கடற்புலிகளின் பலத்தைப் பெருக்கு வதில், தலைவர் அவர்கள் தீவிர கவனம் செலுத்துகின்றார்.*

சண்டைகள் இன்னொரு பரிமாணத்திலும் இருக்கும். ஆழங் குறைந்த கடலில் அலைகள் குறைவாக இருக்கும். எனவே சாதாரண படகுகளையும் சண்டைப்படகாக பயன்படுத்தமுடியும். அத்துடன் 'டோரா' போன்ற சக்தி வாய்ந்த பீரங்கிப் படகுகளை ஆழங் குறைந்த கடலில் ஓடமுடியாது. இவை கடற்புலிகளுக்குச் சாதகமான விடயங்கள். ஆனால் ஆழக்கடலில் பாரிய அலைகள் இருக்கும். அந்த அலைகளுக்கு ஈடு கொடுக்கக்கூடிய அளவுக்குப் படகுகளும் பாரம்கூடியதாகவும் - பாரியதாகவும் - வலிமை உடையதாகவும் இருக்கவேண்டும். அப்பொழுதுதான் பொங்கும் அலைகளின் மத்தியிலும் குறிப்சகாது எதிரிப் படகுகளுடன் மோதமுடியும். இவ்விதமான பாரிய படகுகளைக் கொள்வனவு செய்யும் வசதிகளோ அல்லது கட்டும் வசதிகளோ தற்போது கடற்புலிகளிடம் இல்லை. இதற்கு நிறைந்த தொழில்நுட்பத்துடன் பெருமளவில் பணமும் தேவை. ஆனாலும் ஆழக்கடலிலும் அதிரடித் தாக்குதல் செய்வதற்குரிய சக்தியுடனேயே கடற்புலிகள் உள்ளனர். அவ்விதம் பல அதிரடி நடவடிக்கைகளைச் செய்து, சிங்களக் கடற்படைக்கு கணிசமான இழப்புக்களையும் - இடைவிடாத தலையிடியையும் கொடுத்துவருகின்றனர்.

சிங்களக் கடற்படையைப் பொறுத்தளவில், ஆழக்கடலிலும் கடற்புலிகள் ஆதிக்கம் பெற்றுவிடுவார்களோ என்ற அச்சம்தான், தற்போது மேலோங்கியுள்ளது. ஆயினும் சிங்களக் கடற்படைக்குச் சவாலாக ஆழ்கடலில் நேரடிச் சண்டைகளில் ஈடுபடக்கூடிய அளவுக்கு கடற்புலிகளின் சக்தி பெருகினாலே போதும். அது போரின் போக்கையே தலைகீழாக மாற்றிவிடும் என்பது, இராணுவ ஆய்வாளர்களின் எதிர்பார்ப்பு.

இன்றைய நிலையில், வடதமிழீழத்தில் உள்ள அனைத்துப் படைமுகாம்களின் பாதுகாப்பும் (எல்லைப்புறத்தைத் தவிர) சிங்களக் கடற்படையின் பலத்திலேயே தங்கி உள்ளது. கடற்படையின் உதவி இல்லாமல் வடதமிழீழத்தின் படைமுகாம்களைப் பராமரிப்பது என்பது, சிங்கள அரசுக்கு இயலாத ஒன்று. படைமுகாம்களுக்குத் தேவையான உணவு, ஆயுதத்தளபாடங்கள் மற்றும் அனைத்துப் பொருட்களும் கடற்படைமூலமே விநியோகிக்கப்படுகின்றன. அத்துடன் படைமுகாம்கள் புலிகளால் தாக்கப்படும்போதும் கடல் வழியேதான் சிங்களப் படைகளுக்கு உதவிகள் வந்துசேருகின்றன.



வெடிமருந்துப் படகில் கரும்புலி [illegible] வரதன்.

**'இலங்கைத் தீவில் இரண்டு இராணுவங்கள்' என்ற கருத்துடன், 'இரண்டு கடற்படைகள்' என்றும் மதிப்பிடத் தூண்டும் அளவுக்கு உருவாக்கம் பெற்று, போரின் போக்கையே தீர்மானிக்கும் அளவுக்கு ஒரு நிர்ணய சக்தியாக கடற்புலிகள் வளர்கின்றனர்.**

இந்த விநியோகங்களுக்கும்-உதவிகளுக்கும் ஊறுவிளைவிக்கக்கூடிய அளவுக்கு, கடற்புலிகளின் நடவடிக்கைகள் ஆழக்கடலில் தொடர்ச்சியாக அமையுமாயின், கடலோரப் படை முகாம்களில் சிலவற்றை அகற்றவேண்டிய நிர்ப்பந்தம் சிங்கள அரசுக்கு எழலாம்.

பருத்தித்துறைப் பெருங்கடலில் 29-8-93 அன்று டோரா சண்டைப் படகு மூழ்கடிக்கப்பட்டபின், இந்த அச்சம் சிங்களப் படைத்துறையினரின் மத்தியில் எழுந்துள்ளது. கடற்கரும்புலிகளின் பாய்ச்சலுக்கு சிங்களக் கடற்படையின் பாரிய கப்பல்களும் உள்ளாகலாம் என்ற பயம், சிங்களக் கடற்படையையும் ஆட்கொண்டுவிட்டது. அத்துடன் கடற்படையிடம் இருக்கும் ஒவ்வொரு சண்டைப்படகும் பலகோடி ரூபா பெறுமானமுள்ளது. பருத்தித்துறைக் கடலில் மூழ்கடிக்கப்பட்ட 'டோரா' சண்டைப்படகின் பெறுமதி 30 கோடி ரூபா என, சிங்கள தேசத்துப் பத்திரிகை ஒன்று கூறியுள்ளது.

இவ்விதமாக, பெருங்கடலிலும் சிங்களக் கடற்படை தொடர்ச்சியான இழப்புக்களைச் சந்தித்து, தனது கடலாதிக்கத்தை இழக்குமாக இருந்தால், படைமுகாம்களுக்கான விநியோகங்களை கடற்படை முழுஅளவில் செய்யமுடியாதுபோக வாய்ப்புண்டு. இந்தப் பொறுப்பை சிறீலங்காவின் வான்படையால் பிரதியீடு செய்யமுடியாது. எனவே படைமுகாம்களில் ஆட்குறைப்புச் செய்யவேண்டிய நிர்ப்பந்தம் படைத்துறைத் தலைமைக்கு ஏற்படலாம். இதன் பொருள், ஒன்றில் படைமுகாம்களின் எண்ணிக்கை குறைக்கப்படவேண்டும் அல்லது சிங்களப் படைகள் தாம் கைப்பற்றி வைத்திருக்கும் நிலப்பகுதியிலிருந்து கணிசமான பகுதியைவிட்டுப் பின்வாங்கவேண்டிவரும்.

'சமிந்ர பெர்னாண்டோ' என்ற சிங்கள விமர்சகர், செப். 5 'ஐலண்ட்' வார இதழில் இப்படி எழுதுகின்றார்:

''விநியோக வசதிகளுக்காகக் கடற்படையையே நம்பியிருக்கும் கரையோர இராணுவ முகாம்களை அப்புறப்படுத்தும் வகையில் அரசாங்கத்தை நிர்ப்பந்திப்பதுதான், கடற்புலிகளின் செயற்பாடுகளின் பிரதான இலக்காக இருக்கின்றது. தொடர்ச்சியான முறையில் கடற்படைமீது அழிவுகளை ஏற்படுத்தினால், கரையோர இராணுவ முகாம்களை அகற்றுவதைத் தவிர அரசுக்கு மாற்றுவழி இல்லாதுபோகும் என, புலிகளின் தலைமை நம்புகிறது.''

தமிழீழக் கடலிலே கடற்புலிகள் மேலாதிக்கம் பெற்றால் அது கரையோரச் சிங்களப்படைமுகாம்களுக்கு சாவுமணி அடிக்கும். அதனால் கணிசமான பகுதி நிலமும் சிங்களப் படைகளிடமிருந்து விடுவிக்கப்பட்டுவிடும். அத்துடன் சிங்கள அரசு தமிழீழ மக்கள்மீது திணித்துள்ள சகலவிதமான பொருளாதாரத் தடைகளையும் - மீன்பிடி மற்றும் போக்குவரத்துத் தடைகளையும் - பிசுபிசுக்கச்செய்துவிடும்.

இந்தப் பொற்காலத்தை தமிழீழ மக்களின் கைகளுக்கு விரைவாகக் கிடைக்கச்செய்யும் இலட்சியத்தோடு, கடற்கரும்புலிகளின் துணையுடன் கடற்புலிகள் அயராது பாடுபடுவர். ○

## கடலன்னை...

(11ஆம் பக்கத் தொடர்ச்சி)

அவனை ஈடுபடுத்தின. அந்தப் பணியின் முக்கியத்துவத்தையும் - இன்றியமையாமையையும் அவன் புரிந்துணர்ந்திருந்த போதிலும், சண்டைக்குப் போகவேண்டுமென்ற ஆதங்கமே அவனிடம் மேலோங்கியிருந்தது. கங்கை அமரன் வன்னிக்குப் புறப்பட்டால் தானும் வரப்போவதாக நச்சரிப்பான்; பிருந்தன் மாஸ்ரர் கிளாலிக்கு வெளிக்கிட்டால். தன்னையும் கூட்டிச் செல்லுமாறு அடம்பிடிப்பான். தன்னோடு நிற்கும்போதே, சண்டைக்கு அனுப்பும்படி மணியரசன் தனக்கு எழுதும் கடிதங்களை வாசிக்கவேண்டிய வில்லங்கம், தளபதி சூசைக்கு இருந்தது.

அவனது ஆசை ஓரளவு பூர்த்தியாகி வர - வடமராட்சியிலுள்ள தலைமைத் தளத்தில் பகல் முழுவதும் 'மசற்' கதைத்துக் கொண்டிருப்பவன், இரவுகளில் - கிளாலியின் சண்டைமுனையில் ஒரு எல். எம். ஜியுடன் வலம்வரத் துவங்கினான்.

இறுதிக் காலத்தில் - முழுமையாக, கிளாலியின் மக்கள் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்த பொழுதுகளிலும் - ஒரு கரும்புலித் தாக்குதலே மணியரசனுடைய பிரதான குறியாக இருந்தது. எங்களுக்குள் சுழன்று திரிந்த அந்த இனிய நண்பன், அதைத்தான் செய்து முடித்தான்.

அவனுடைய கடைசி நாட்களில் அவன் மிகுந்த உற்சாகமாக இருந்தான்.

தனது முகம்தெரியாத நண்பர்களிடம் வானலைகளினூடாக விடைபெற்றான்; அந்த தொடர்பு சாதனத்திடமிருந்தும் விடைபெற்றான்.

கிளாலிக் கடலில் - சிதைந்து போன நிலையிலும் - மதன் அதிசயமாய் மிதந்து வந்தபோது, நாங்கள் பக்குவமாய் எடுத்து வந்து துயிலுமில்லத்தில் விதைக்கையில், கண்ணீரோடு மதனுக்கு மண் போட்டான். அந்த நேரத்தில் எனக்கு மண்போடும் பாக்கியம் ஒருவருக்கும் கிடைக்காது என்று நினைத்திருப்பானோ......?

தோரணம் கட்டி, பந்தல் போட்டு - மதனுக்கும் வரதனுக்கும் அஞ்சலி செய்த போது, வீதி வீதியாகத் திரிந்து பார்த்தான். இன்னும் நாலு நாளில் தனக்கும் இப்படித்தான் செய்வினம் என்று நினைத்திருப்பானோ......?

இப்போது அவன் போய் விட்டான்; எங்களால் எட்ட முடியாத தொலைவுக்கு. எங்களைக் கிண்டல் செய்துகொண்டிருக்க அந்த அறுவைக்காரன் இப்போது இல்லை, இயக்கம் 'பொமர்' வாங்கினால் இறக்கி ஓட அந்த 'றண் வே'யும் இப்போது இல்லை! ○

## சிறீலங்கா...

(13ஆம் பக்கத் தொடர்ச்சி)

போதுமானவையல்ல என்பதையறிந்த சிறீலங்கா கடற்படையின் தலைமையலுவலகம் (Head Quarters), தற்போது பிரான்ஸ் நாட்டு உதவியுடன் மேலும் பல்வேறு போர்க்கப்பல்களையும், அவற்றிற்குரிய பயிற்சிகளையும் கடற்படைக்கு உடனடியாக வழங்குகின்றது இதன் முதற் கட்டமாக பிரான்ஸ் நாட்டு யுத்தக்கப்பலான 'கொமான்ட் போரே' கொழும்புத் துறைமுகத்தில் சென்ற மாதம் தரித்துநின்று, இதற்கான சகல நடவடிக்கைகளையும் மேற்கொண்டது என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும், தற்போதைய யதார்த்த நிலைமையைப் புரிந்த சிறீலங்கா கடற்படை, தனது பலத்தை வட பகுதியில் ஒருங்குகுவிக்கவேண்டிய தோர் நிர்ப்பந்தத்துக்குத் தள்ளப்பட்டுள்ளது என்பது வெளிப்படை. ஏற்கெனவே 'வடபகுதிக் கடற் பிராந்தியத்தில்பின்வரும் தளங்கள், பிரிவுகள் அமைக்கப்பட்டுள்ளன.

01. காரைநகரில் உள்ள 'எலாற' கடற்படைத்தளம்.
02. காங்கேசன்துறையிலுள்ள 'காபர்வியூ கொட்டேல்'.
03. கடற்படைத் தொண்டர் படை அலுவலகம்.
04. நயினாதீவு கடற்படைத்தளம்.
05. நாகதேவனதுறை கடல்ரோந்துப் படைத்தளம்.

இவைமட்டுமின்றி சிறீலங்காகடற்படையின் மூன்று கண்காணிப்பு கட்டளைக் கப்பல்கள், வடபகுதிக் கடற் பிராந்தியங்களிலேயே நிரந்தரமாகத் தரித்துள்ளன. அதே போல அதிவேக ரோந்துப் படகுகள், பீரங்கிப் படகுகள் என்பனவும் பெரும்பாலும் வடபிராந்திய கடல் பகுதிகளிலேயே ரோந்தில் ஈடுபடுகின்றன.

வடபகுதியைப் போன்று பலமுள்ளதாக இல்லாது - மேற்குப் பிராந்தியக் கடற்பிராந்தியமானது, கடற்படைச் சிப்பாய்களது நலன்களைப் பேணுவது, மற்றும் கடற்படை தொடர்பான சகல நிர்வாக வேலைகளைக் கவனிப்பதற்கும் அமைக்கப்பட்டுள்ளது. இதன் கட்டளையதிகாரியாக கப்டன் எ. எச். என். ராஷீக் தற்போது பணியாற்றுகிறார்.

இவ்வளவு பலத்தையும் ஒரே கட்டுப்பாட்டு மையத்தின்கீழ் வைத்திருக்கும் முகமாக சிறீலங்கா கடற்படை, தற்போது காங்கேசன்துறை சீமேந்துத் தொழிற்சாலையுடன் கூடிய துறைமுகத்தையே வடபகுதியின் பாரிய கடற்படைத் தளமாக அமைக்கப் போவதாகவும், காரைநகர் கடற்படைத்தளத்திலும் பார்க்க இதுவே பாரியதாக அமையும் எனவும், வடபகுதியில் கடற்புலிகட்கு எதிராகப் போரிட புதிய கடற்படையணியாகிய ''கடற்சிங்கங்களை'' உருவாக்கப் போவதாகவும் அறிவித்துள்ளது. ○

## எங்கள் தாயகம் எத்தனை அழகு!

தாயின் மடிச்சுகத்தையும்
தாயகமண்ணின் தனிச்சுகத்தையும்
எழுதத் தொடங்கினால்.....
ஏன் பேனா வற்றுவதில்லை?
"அமுதசுரபி" போலவும்
"அட்சயபாத்திரம்" போலவும்
ஏன் அள்ள அள்ளக் குறைவதில்லை?
எந்தையர் பூமி எத்தனை அழகு!
கள்ளிச்செடி படர்ந்த கலடுத் தரையானாலும்
பச்சை போர்த்த படுக்கைபோல
பார்க்கும் போது கண்ணில் காதல் வழிகிறதே!
ஒழுங்கில்லாத ஒற்றையடிப் பாதைகள்கூட
உச்சி வகிடெடுத்த பேரழகியின் தலையைப்போல
உன்னத அழகோடு ஓடிவருகின்றனவே
ஏன்?
தொட்டளைந்த பூமியின் சுகமும், மணமும்
எட்டஇருக்கும் நிலத்தில் ஏற்படாது.
எங்கள் அன்னைமண் எத்தனை எழில்
பிஞ்சுப் பிள்ளைகளின் பூவிரல்கள்போல......
வைகாசி மாதத்து மாமரங்கள்போல...
துள்ளிக் குதிக்கும் பிள்ளைக் கன்றுகள்போல......



வெள்ளலைகள் கரையொதுக்கும்
நுரைப்பூக்களைப் போல...
எங்கள் தாயகம் எத்தனை அழகு!
தமிழீழம் சந்தனக்காடு
இதிகாசத்தில் படித்த இந்திரன் பூமி.
"தால்ஏரி" காலெடுத்து நடக்கும் "காஷ்மீரை"
காணக் கண்கோடி வேண்டுமாமே.
"ஹவாய்" தீவின் கடற்கரையில்
ஒருநாள் நடந்துவிட்டு இறந்தாலே
பிறந்தபலன் பூரணப்படுமாமே!
யார் சொன்னது?
தென்தமிழீழத்தைத் தெரியாத ஒருவன்
சொல்லியிருக்கலாம்.
மஞ்சள் வெயில் மேனிதழுவும் மாலைநேரம்
கோணமலையில் நின்று கீழே பாருங்கள்;
கோட்டை வாசலில் நிமிர்ந்து நின்று
பாதாளமலையின் பக்கமாக விழிகளை வீசுங்கள்.
உவமையற்ற அழகை உணர்வீர்கள்.
வார்த்தைகள் தோற்றுப்போகும்.
பேற்றுக்கால தாய்மை அழகோடு
நெற்பயிர்கள்
பால்மணிக் கதிர்கள் தள்ளும் பருவத்தில்
தம்பலகாமத்து வயல் வரம்புகளில்
காலாற நடந்து பாருங்கள்
காலமழை பொய்க்காத காலத்தில்
கந்தளாய் குளம் நிறைந்திருக்கும் நேரத்தில்
உயர்ந்த அணைக்கட்டில் உட்கார்ந்து கொண்டு
தாளஅசைவுக்குச் சதிராடும் பெண்களைப் போல
நீளப்பறக்கும் வெண் கொக்குகளை நிமிர்ந்து பாருங்கள்
கந்தளாயின் காலடியில்
காஷ்மீர் கைகட்டி நிற்கும்.
நிலம் வெளிக்காத புலரிப் பொழுதில்
"வெருகல்" வேலன் திருவிழாக் காலத்தில்
மாவலி கங்கையின் மடியிலே விழுங்கள்.
கொட்டியாரக் குடாக்கடல் தேடி
கைநீட்டி வந்து கட்டித் தழுவும்
ஆற்றின் அருகில் அமர்ந்து கொள்ளுங்கள்
எங்கள் தாயகம் எத்தனை அழகு!
தென்தமிழீழம் சுந்தரப் பூமி.
கன்னங்குடா,
பட்டித்திடல்
இன்னும் இன்னும் எத்தனை ஊர்கள்
அத்தனையும் அழகு.

## உலைக்களம்

வியாசன்

வெள்ளிநிலா விளக்கேற்றிக் கொள்ளும்
நள்ளிரவில்
புளியந்தீவில் பொன்னாவரசு பூத்திருக்கும் காலத்தில்
மட்டுநகர் வாவிக்கு வாருங்கள்
மேலே பெண்ணுருவும், கீழே மீனுருவும் கொண்ட
"நீரரமகளிர்"
குரலெடுத்துப் பாடிக் குளிப்பார்கள்.
படகெடுத்துப் பக்கத்தில் போனால்
முகம் மறைத்து முக்குளித்து விடுவார்கள்.
கற்பனை யென்றாலும் எத்தனை சுகம்!
மட்டக்களப்பு புல்வெளிகளில்
மேய்ச்சல் முடிந்து வீடு திரும்பும் பசுக்களின்
மடிசுரந்து வீதியெங்கும் வெள்ளமாகும்;
கன்றை நினைத்து கால்களை நனைக்கும்.
வண்டு துளைபோட்ட மூங்கில் காடுகள்
வாத்தியம் இசைக்கும்.
வாழைச்சேனை கரும்புக் காட்டில்
நிலத்துநீரைத் தண்டுகள் உறிஞ்சுவதில்லை
கரும்புச் சாறை நிலம்தான் குடித்துக் கொள்கிறது.
இலங்கை இந்து சமுத்திரத்தில் மிதக்கும்
ஒரு தீவு;
ஆனால் இரண்டு நாடுகள்.
தமிழீழம் பருவநிலை மாறுபடும் பகுதிகள் அடங்கிய
பரந்த தேசமல்ல......
ஒரேநாளில்
உதயத்தை காங்கேசன்துறையிலும்
அஸ்தமனத்தை அக்கரைப்பற்றிலும்
பார்த்துவிட்டு படுக்கைக்குப் போகலாம்.
மட்டக்களப்பின் முட்டித்தயிர்
புளிக்க முன்னர்
புங்குடுதீவுத் திருமணமொன்றின்
பந்தியிலே பரிமாறப்படும்.
யாழ்ப்பாணத்துக் "கறுத்தக் கொழும்பான்"
அழுக முன்னர்
திருக்கோவில் தெருக்களில் விற்பனைக்கிருக்கும்.
வடதமிழீழம் வரண்டது;
வரண்டதே தவிர சுருண்டதல்ல......
தென்தமிழீழம் செழிப்பானது;
செழிப்பானதே தவிர செருக்கானதல்ல......
திருமலை தமிழீழத்தின் தலைநகர்.
எங்கள் வானத்துக்கு நிலவு ஒன்றுதான்;
தலைவனும் ஒருவன்தான்.
இன்று,
மனங்களை அடைத்து நின்ற மலைகளெல்லாம்
விடுதலை அதிர்வால்
வெடித்துச் சிதறுகின்றன.
பிரதேசப் பிரிவுகள்
போராட்டத் தீயால் பொசுங்கி எரிகின்றன.
தென்தமிழீழம்
எங்கள் தாயகத்தின் தலைவாசல்;
தானியக் களஞ்சியம்;
பாலும் தயிரும் பயிருக்குப் பாய்ச்சும் நிலம்.
இன்று -
தமிழரின் குருதி பாயும் நிலம்.
அவர்களின் கண்ணீரைத் துடைக்க
கைகளை நீட்டுவோம்;
எதிரியைக் கலைத்து எல்லையைப் பூட்டுவோம்!

புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்